# ஏழு கதிர்

## மாவட்ட இலக்கிய விழா - 2013

### சிறப்பு மலர்

இதழ் - 01

வெளியீடு:
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ கதிர்

## மாவட்ட இலக்கிய விழா – 2013
## சிறப்பு மலர்

**மாவட்ட இலக்கியப் போட்டி - 2013ல் முதல் இடத்தைப்பெற்ற ஆக்கங்களின் தொகுப்பு**

## இதழ் - 01

வெளியீடு:
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



எமது மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும், கலாசார அலுவல்கள் திணைக்களமும், இணைந்து நடாத்தும் மாவட்ட இலக்கிய விழா 2013ஐ முன்னிட்டு வெளியிடப்படும் "எழுகதிர்" சிறப்பு மலருக்கு அணிந்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைத் தேசத்தின் மட்டக்களப்பு மாவட்டம் புவியியல் ரீதியில் தனித்துவமான ஒரு பிரதேசம். புவியியலின் பல்வகையான பண்புகளை ஒரே இடத்தில் அவதானிப்பதற்கு ஏற்ற இடம் மட்டக்களப்பு மாவட்டம் என்பது மிகையாகக் கூறும் கூற்றல்ல. "மீன்பாடும் தேன்நாடு" என்ற வர்ணனை, மட்டக்களப்பு மாவட்டம் நீர் நிலைகளைத் தனித்துவமானதாகக் கொண்டிருக்கிறது என்பதற்கு தக்க சான்றாகும்.

இத்தகைய புவியியல் சூழல் மட்டக்களப்பு மக்களிடையே கலை, இலக்கிய, உணர்வினை அவர்களின் வாழ்வுடன் சங்கமிக்க வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். கலை, இலக்கியத் துறையில் புகழ்பெற்று விளங்கும் பல கலைஞர்களும், இலக்கிய வாதிகளும், இம்மண்ணில் அன்றும் இன்றும் வாழ்ந்து வருவது இதற்கான சான்றாகும்.

இந்த வகையில் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற இலக்கியப் போட்டியில் பங்கு பற்றி முதலிடம் பெற்ற ஆக்கங்களை மக்கள் மன்றத்தில் முன்வைக்கும், நோக்குடன் இவ்வருட மாவட்ட இலக்கிய விழாவின் போது "எழுகதிர்" சிறப்பு மலர் வெளியிடப்படுவது எனக்கு பெருமகிழ்ச்சியினைத் தருகின்றது.

மேலும் நமது மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளும், ஏனையோரும், கலை, இலக்கியத் துறைகளில் அதிக ஈடுபாடு காட்டவேண்டும். இத்துறைகளில் ஈடுபடும் போது வீணான சிந்தனைகளும், ஒழுக்க விழுமியத்தை சீர்குலைக்கும் நிகழ்வுகளும், நமது சமூகத்தில் இடம் பெறுவதைத் தடுக்க முடியும்.

இச்சிறப்பு மலர் வெளிவருவதற்கு காரணமாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும், இவ்விழா சிறப்பாக நடைபெறுதற்கு நிதி அனுசரணை வழங்கிய அரச வங்கிகள், மற்றும் அரசசார்பற்ற நிறுவகங்களுக்கும், எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.P.S.M.சார்ள்ஸ்**
**மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்,**
**மட்டக்களப்பு மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய விழா 2013 இனிதாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவிக்கும் அதேவேளை இவ்விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் "ஏழுகதிர்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு நான் பெருமிதமடைகின்றேன்.

இலங்கை மக்களிடையே இலக்கியக்கலை மற்றும் கலாசாரத்தின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பிரதேச இலக்கிய வாதிகளது திறமைகளுக்கு புத்துயிர் அளிக்கவும், பிள்ளைகள் மற்றும் இளைஞர் பரம்பரையினருக்கு கலை இலக்கியத்தின்பால் விருப்பு தன்மையினை ஏற்படுத்தி அவர்களை கலை உணர்வுள்ள சமூகமாக மாற்றவும், கலை இலக்கிய வளர்ச்சியின் மூலம் ஒரு நல்ல சமூகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் கலாசார அலுவல்கள் திணைக்களமானது கடந்த பல தசாப்தங்களாக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமையை நாட்டு மக்கள் நன்கறிவர்.

இந்த வகையில்தான் பிரதேச, மாவட்ட, தேசிய ரீதியாக இலக்கியப் போட்டிகளும் இலக்கிய விழாக்களும் எமது திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்டம் கலை, இலக்கியத் துறையில் சிறப்புற விளங்குகிறது என்பதனை நான் நன்கறிவேன். அத்துடன் எமது திணைக்களத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் கடமைகளையும் அறிவுறுத்தல்களையும் செவ்வனே நிறைவேற்றும் மாவட்ட அரசாங்க அதிபர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், எமது திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள், பட்டதாரி பயிலுநர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"எழுகதிர்" சிறப்பு மலர் பல்லாண்டு காலம் தனது மாவட்டத்தின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பணியாற்றி எழுச்சி காண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. விஜித் கனுகல**
**பணிப்பாளர்**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**8ஆம் மாடி, செத்சிறிபாய**
**பத்தரமுல்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்படும் 'எழுகதிர்' சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

நான் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராகக் கடமை புரிந்த காலத்தில் 2007, 2009, 2013ம் ஆண்டுகளில் மாவட்ட இலக்கிய விழாக்கள் நடைபெற்றபோதிலும் சிறப்பு மலர் வெளியிடப்படாமை பெரும் குறையாக இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு முதன்முறையாக இம்முறை 'எழுகதிர்' எனும் பெயரில் விழா சிறப்புமலர் வெளியிடப்படுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் எமது மாவட்ட கலை, இலக்கிய பணிகளுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் இவ்விழாவில் "கலைச்செம்மல்" விருது வழங்கி கௌரவிக்கப்படவிருக்கும் எனது அன்பிற்கும், மரியாதைக்குமுரிய ஏழு கலைஞர்களுக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இம் மலர் வெளிவரக் காரணமாக இருந்த கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களுக்கும் பங்களிப்புச் செய்த ஏனையோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

"எழுகதிர் பல்லாண்டு காலம் வாழ்க"

**திரு.வ.வாசுதேவன்**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**மண்முனைப்பற்று,**
**ஆரையம்பதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



எமது மாவட்டச் செயலகமும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் மாவட்ட இலக்கிய விழா 2013 இனை முன்னிட்டு 'எழுகதிர்' சிறப்பு மலர் வெளியிடப்படுவதையிட்டு பெருமையடைகிறேன்.

கடந்த காலங்களில் மாவட்ட இலக்கிய விழாக்கள் நடைபெற்ற போதிலும் இவ்வருடம் நடைபெற்ற ஆக்கங்களை உள்ளடக்கிய நூலாக 'எழுகதிர்' சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது. பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களில் கட்டுரை, கவிதை, கவிதைபாடல், கையெழுத்து, சிறுகதை, சிறுவர்கதை பாடலாக்கம், இலக்கிய விவரணம், பாடல் நயத்தல் மற்றும் நாட்டார் கலை கற்றல் போட்டிகளில் வெற்றி பெற்ற படைப்புக்கள் உண்மையில் நமது மாவட்ட மாணவர்களினதும், பொது மக்களினதும் இலக்கிய ஆர்வத்துக்கும், திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். இவற்றை மாவட்ட மக்களிடையே பகிர்ந்து கொள்வதும் போட்டியாளர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதும் சமூகங்களின் கலை கலாசார விழுமியங்களை வெளிப்படுத்துவதும் மாவட்ட செயலகத்தின் கடமை என்ற வகையில் மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் இச்சிறப்பு மலர் வெளியிடப்படுவதற்கான அனுமதியினை வழங்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்காலத்தில் நடைபெறும் மாவட்ட இலக்கியப் போட்டிகளில் மேலும் பல போட்டியாளர்கள் பங்குபற்றுவதற்கு இச்சிறப்பு மலர் வழி கோலும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இச்சிறப்பு மலர் வெளிவருவதற்கு தமது பங்களிப்பினை வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.ரங்கநாதன்**
உதவி **மாவட்டச் செயலாளர்,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே!


- மாவட்ட இலக்கியப் போட்டிகள் முடிவுகள் – 2013 — 01
- கையெழுத்துப்போட்டி (பாலர் பிரிவு) — 02
- விந்தையான மனிதனின் எதிர்கால சமுதாயத்திற்கு – கவிதை (கனிஷ்ட பிரிவு) — 03
- அறிவியல் வளர்ச்சியும் எதிர்கால சமுதாயமும் – கட்டுரை (கனிஷ்ட பிரிவு) — 05
- விந்தையான மனிதனின் எதிர்கால சமுதாயத்திற்கு – கவிதை (சிரேஷ்ட பிரிவு) — 11
- விந்தையான மனிதனின் நாளைய சமுதாயத்திற்கு – கட்டுரை (சிரேஷ்ட பிரிவு) — 13
- நாட்டார் பாடல் – (சிரேஷ்ட பிரிவு) — 23
- சிறுவர் உரிமைப்பாடல் – (திறந்த பிரிவு) — 25
- உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி – (திறந்த பிரிவு) — 27
- மாந்திரிகச் செயல்முறைகள் (திறந்த பிரிவு) — 30
- கலைஞன் தரித்த காவி உடை – சிறுகதைப் போட்டி – (திறந்த பிரிவு) — 34
- குழந்தை அந்தாதி – கவிதைப்போட்டி – (திறந்த பிரிவு) — 41
- மீனுக்குட்டி – சிறுவர் கதைப்போட்டி – (திறந்த பிரிவு) — 42
- கலைச் செம்மல் விருது பெறும் கலைஞர்கள் — 46
- அனுசரணை வழங்கியோர் — 53
- நன்றிகள் — 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்கிய கலை போட்டித் தொடர் - 2013

## மாவட்ட இலக்கிய கலைப்போட்டி முடிவுகள்

## மட்டக்களப்பு மாவட்டம்.

| போட்டியின் பெயர் | பிரிவு | 1ம், 2ம்,3ம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|---|---|
| கையெழுத்துப் போட்டி | பாலர் பிரிவு | 1. K.F.றிஸ்மியா | கோறளைப்பற்று மத்தி |
| | | 2. வெற்றிவேல் டினுஸ்கா | செங்கலடி |
| | | 3. அபந்திகா யோகராஜா | மட்டக்களப்பு |
| | | 3. S.F.இலாபா | ஓட்டமாவடி |
| கவிதை பாடுதல் போட்டி | | 1. J.F. நுஹா | கோறளைப்பற்று மத்தி |
| | | 2. S.A. அமானா | ஓட்டமாவடி |
| | | 3. HNF நுஹா | ஏறாவூர் நகர் |
| கவிதைப் போட்டி | கனிஷ்ட பிரிவு | 1. அ.ர.பா.ரஹ்னா | காத்தான்குடி |
| | | 2. விதுசினி இளங்கோ | மட்டக்களப்பு |
| | | 3. திருநாவுக்கரசு பிரவீநாளினி | செங்கலடி |
| கட்டுரைப் போட்டி | | 1. விக்னேஸ்வரன் கோபிஷாலினி | வெல்லாவெளி |
| | | 2. த.ரமேஷ் | கிரான் |
| | | 3. இந்திரகுமார் அனித்தா | வாகரை |
| கவிதை பாடுதல் போட்டி | | 1. பிரபாகரன் திவ்வியபாரதி | மட்டக்களப்பு |
| | | 2. M.N.மின்னத் ஸறா | ஏறாவூர் நகர் |
| | | 3. சந்திரசேகரன் தர்மிகா | களுவாஞ்சிக்குடி |
| கவிதைப் போட்டி | சிரேஷ்ட பிரிவு | 1. நிஷாந்தினி நடேசலிங்கம் | செங்கலடி |
| | | 2. தாஹா பாத்திமா சாஜிதா | காத்தான்குடி |
| | | 3. MNF.ஸஹீகா | கோறளைப்பற்று மத்தி |
| கட்டுரைப் போட்டி | | 1. அமீனுதீன் பாத்திமா ஹாபிழா | கோறளைப்பற்று மத்தி |
| | | 2. நேசதுரை கதிர்சன் | பட்டிப்பளை |
| | | 3. சகாயநாதன் டேவிட் | மட்டக்களப்பு |
| கவிதைப் பாடல் | | 1. சுந்தரலிங்கம் விதுசன் | களுவாஞ்சிக்குடி |
| | | 2. MNF. நுஸ்ரா | கோறளைப்பற்று மத்தி |
| | | 3. பவானந்தராசா டிசாந்தன் | மட்டக்களப்பு |
| பாடல் நயத்தல் | | 1. வே.கோசலாதேவி | பட்டிப்பளை |
| | | 2. முஹமட் நஸீர் பாத்திமாசப்ரியா | ஏறாவூர் நகர் |
| | | 3. வ.ரேணுகா | வெல்லாவெளி |
| | | 3. திவ்யா புண்ணியமூர்த்தி | மட்டக்களப்பு |
| பாடல் ஆக்கம் | திறந்த பிரிவு | 1. கணபதிப்பிள்ளை தணிகாசலம் | வெல்லாவெளி |
| | | 2. க.நௌஷாத் | ஏறாவூர் நகர் |
| | | 3. திருமதி.சுதாகரி மணிவண்ணன் | செங்கலடி |
| இலக்கிய விவரணம் | | 1.M.S.M.ஸப்றாஸ் | ஏறாவூர் நகர் |
| | | 2. திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் | வாழைச்சேனை |
| | | 3. தங்கவேல் ரமீஸ்குமார் | வெல்லாவெளி |
| நாட்டார் கலை கற்றல் | | 1. மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | 2. சுந்தரமதி வேதநாயகம் | மட்டக்களப்பு |
| | | 3. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | வாழைச்சேனை |
| சிறுகதைப் போட்டி | | 1. சுப்பிரமணியம் சிவலிங்கம் | செங்கலடி |
| | | 2. முஸ்தபா முகம்மது அஷ்ரஃப் | ஏறாவூர் நகர் |
| | | 3. திருமதி. தமிழ்ச்செல்வி துஷின் | ஆரையம்பதி |
| கவிதைப் போட்டி | | 1. எதிர்மன்னசிங்கம் ஜெயரஞ்சித் | வாழைச்சேனை |
| | | 2. திருமதி.றமீஸா நௌபர் | காத்தான்குடி |
| | | 3. அப்துல்கரீம் அப்துல்றகுமான் | ஏறாவூர் நகர் |
| | | 3. கணபதிப்பிள்ளை சிவகுருநாதன் | பட்டிப்பளை |
| சிறுவர் கதைப்போட்டி | | 1. சுந்தரமதி வேதநாயகம் | மட்டக்களப்பு |
| | | 2. திருமதி.சுதாகரி மணிவண்ணன் | செங்கலடி |
| | | 3. திருமதி. சித்தி றபீஸா முகம்மது நியாஸ் | காத்தான்குடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு) மட்டக்களப்பு மாவட்டம்

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற வாசகம் கண்ணனின் அடிமனதில் ஆழப்பதிந்தது. எனினும், பலத்தை புரிந்து கொள்ளக்கூடிய தன்மையோ, அதை ஆழம் கண்டு அளாவிடும் அறிவோ அவனுக்கு கிடையாது.

என்றாலும், அந்த சின்ன வயதில் அந்த வாசகத்தை சிந்திக்கக் கூடிய தன்மை இருந்தது. நீண்ட நேரமாக அந்த வாசகத்துடனே போராடிக் கொண்டிருந்த கண்ணன், ஏதோ நினைத்தவனாக வீட்டு வேலையில் மும்முரமாக ஈடுபட்டு கொண்டிருந்த தனது தாயை நோக்கி ஓடினான்.

தனது ஓட்டத்தை வழிமறித்த தாய், பார்வையால் விளக்கம் கேட்க, அந்த சின்ன மகன் தனக்குப் புரிந்தும் புரியாமல் இருந்த அந்த வாசகத்தைக் காட்டி விளக்கம் கேட்டான். மகனது விவேகத்தைப் பாராட்டிய தாய் பாக்கியம் மகனை கட்டி தழுவி உச்சிமுகர்ந்தாள்.

உலகில் எத்தனையோ சிறுவர்கள் ஏதோ ஒரு வகையில் சீரழிந்து கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் அவளது மகன் மாத்திரம் சிப்பிக்குள் இருக்கும் பெருமதிமிக்க முத்தாக தெரிந்து முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தியவளாக, மகனுக்கு புரியாமல் இருந்த அந்த வாசகத்துக்கு தெளிவாக விளக்கம் கொடுத்தாள்.

## பாலர் பிரிவு கையெழுத்துப்போட்டியில் முதலிடம் பெற்ற வெற்றியாளர் விபரம்



**பாலர் பிரிவு -கையெழுத்துப்போட்டி**

செல்வி. K.F.றிஸ்மியா

வயது - 10

மட்/மம/ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தையான மனிதனின் எதிர்கால சமுதாயத்திற்கு



**செல்வி. அ.ர.பா.ரஹ்னா**
**வயது– 13**
**மட்/ஹிழுரியா வித்தியாலயம்**
**காத்தான்குடி**

**கவிதைப் போட்டி கனிஷ்ட பிரிவு**
**முதலாம் இடம்**

விஞ்ஞானம் விண்தொட்டு விதம் விதமாய்
சாதனங்கள் விளைவுகளாய் வந்த பின்னும்
வில்லங்கம் தீரவில்லை – கண்ணெதிரே
துஞ்சாது துயிலாது துடித்துப்பரிதவிக்கும்
மனிதனது தொடர் தலைமுறையை மனம்
நிறைவாய் வாழவைப்போம்!

மனுபெருகி மனைபெருகி மானிடர்
உணவருந்தி மகிழ்வோடு மணம் முடித்து வாழ
தொழில் பெருகி இன்று போல் அனுதினமும்
அல்லலுறும் இழி நிலை என்றென்றும்
அவனியிலே வேண்டாம் அடுத்துவரும் எம்
சமூகத்துக்கு!

தூசிப்படலும் , சுவாசிக்க ஒவ்வாத சுற்றுப்புற
வளியும் தூய்மை தொலைந்த குடிநீரும் ,
விஷமேறிய மரக்கறிகளென இந் நாளில்
மாசுபடா பண்டமில்லையதால் நலமிழந்து ,
நலிவுற்று நிற்கிறோம். நாமதற்கு
முடிவுகாண்போம் , நமது தலைமுறைக்கு
விடிவு மலர!

சுற்றுப்புறமெல்லாம் தூய்மையாய் தொடராய்
பேணி சுகந்தம் வீசும் தென்றல் வலம் வரவே
வகை செய்து இன்பம் அற்றுப்போகும் நிலை
இடம்பெற இடமளியோம்! இனியிங்கு அடுத்த
எம் தலைமுறையின் அக மகிழ்வை இன்றே
உறுதி செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமைமரங்கள் நட்டு எங்கள் பாருலகைப்
பாதுகாப்போம்! பயனுறு வழிவகையை
கையாண்டு கழிவுகளை பயிரை உசுப்பி
வளர்த்துவிடும் ஒப்பில்லா உரமாக்கி , அக்
கலையை உணர்த்தி அளித்திடுவோம்
தலைமுறைகள் தலை நிமிர!

இயற்கையுடன் உறவாடி இயற்கை
ஊனுண்டு இன்புறும் மரபிருக்க இல்லாத
நோய்களையும் பொல்லாத வலிகளையும்
உரிமையாக்கும் திடீர்ச் செயற்கை
உணவுகளை ஒதுக்கியிங்கே சுகவாழ்வை
உறுதிசெய்து செழிக்கும் வழிமுறையை
தழைத்தோங்க கையளிப்போம்!

புதுமைகளாய்ப் பெருகியிங்கே பயன்பாட்டில்
கோலோச்சும் புது வரவுக் கணனிகளும்
கைபேசிகளும் மலிந்திங்கே நிதம்
"தீது"களாய்ப் பண்பாடு பாழடையும்
பாவனையை ஒழித்தொதுங்கி திறமைக்கு
வழிசமைக்கும் கருவியாய்க் கருதிட
வழிசமைப்போம்!

இயற்கை வளமனைத்தும்
வறிதாகிப்போய்விடலாம் , எரிபொருளும்
இல்லாமல் போய்விடலாம் என்பதினால் தூய
புத்தாக்கப் பதிலீடு புதிதாய் நலமாய் நலமாய்
வளமாய் வையகத்தில் கண்டுபிடித்திங்கே
நல்லதொரு வழிவகை செய்வோம்
சிந்தையுள்ள மானிடராக!

வாழையடி வாழையென வரவுள்ள
தலமுறையே வாய்மையுடன் வாழ்ந்து நீயும்
வையகத்தை வென்று நில்லு! எனினும்
மழைபோலப் பொழிந்தாலும் உன் வாழ்வில்
துன்பதுயர் மலை போல உறுதியுடன்
மசியாமல் நிலைத்து நில்லு!

ஊருயர பாடுபட்டு ஒன்றுபட்டு
ஒத்துழைக்கும் உறவுகளை ஊக்குவித்து
உயர்வளிக்கும் வல்லோராய் மதிப்பளித்து
இவ்விதமே நமது பரம்பரையும் பொது
நலத்தில் ஒன்று பட்டு உயர்வடைய மனமார
விதந்துரைப்போம் வாழ்த்திநிற்போம் வருக
வாழ்வாங்கு வாழிய என்றே !

## பாலர் பிரிவு கவிதை பாடல் போட்டியில் முதலிடம் பெற்ற வெற்றியாளர் விபரம்

**பாலர் பிரிவு - கவிதை**

செல்வி. J.F.நுஹா
வயது - 11
கோறளைப்பற்று மத்தி
வாழைச்சேனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் வளர்ச்சியும் எதிர்கால சமுதாயமும்



செல்வி – விக்னேஸ்வரன் கோவிசாலினி,
வயது – 14,
மட்/ மண்டூர் இராமகிருஷ்ண வித்தியாலயம்,
மண்டூர்.

கட்டுரைப் போட்டி
கனிஷ்ட பிரிவு
முதலாம் இடம்

கலியுகம் எனக்கூறப்படும் மனித வாழ்வியலில் நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் புதிய ஆராய்ச்சிகளும் கண்டு பிடிப்புக்களும் நடைபெற்றுக்கொண்டும் வெளி வந்து கொண்டும் இருக்கின்றன. இரசாயன வியல், இயற்பியல், மருத்துவம், வானியல், பௌதீகவியல், தொழில்நுட்பம், எனப்பல துறைகளிலும் ஆச்சரியத்தினையும், அச்சத்தினையும் ஏற்படுத்தக் கூடிய பல புதிய தகவல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். உலகம் கிராமமாகச் சுருங்கி விட்டது. இச்சூழலுக்கு ஏற்ப எதிர்கால சமுதாயமும் விந்தையான



முறையில் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் அவசியமும் இன்றி யமையாத தாகிவிட்டது. அன்றைய எண்ணங்கள் இன்றைய வளர்ச்சியின் அடித்தளமாக அமைகின்றன.

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்
பாயும் மீன்களின் அழகினில் படகினைப் படைத்தான் எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்..." என்று

அழகாக அறிவியலையும் நடைமுறையுடன் அழகாக ஒப்பிட்டான் தமிழ்க் கவிஞன். நாம் இன்று பல அறிஞர்களிடம் கல்வி அறிவு பெற்று அறிவியல் வளர்ச்சியின் பயன்களை அனுபவிக்கின்றோம். "சாலமன் அரசர்" இந்தக் காலத்தில் தீப்பந்தங்களே விளக்காக இருப்பதைக்கண்டு தன் ஞானத்தால் தீயே இன்றி விளக்குகள் வருங்காலத்தில் தலைகீழாக எரியும் என்றார். அதைக்கேட்ட மக்கள் அவரைக்கண்டு சிரித்தனர், "இது எப்படி சாத்தியமாகும்?" என்றனர். அதற்கான விடை இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடம் "தோமஸ் அல்வா எடிசனின்" கண்டுபிடிப்பு வழியாக விளக்குகள் தலைகீழாக மட்டுமல்ல பல வழிகளிலும் பல வண்ணங்களிலும் எரிகின்றன.

அறிவியல் மின்வலுக் கண்டு பிடிப்பானது ஒரு மாபெரும் திருப்பு முனை யாக விளங்குகின்றது. சாதாரண போக்கிலே வளர்ந்து கொண்டிருந்த அறிவியல் அசுர வேகத்தில் முன்னேற்றம் அடைவதற்கு மின் வலுக்கண்டு பிடிப்பே மூல காரணமாகும். ஆரம்ப காலங்களில் மக்கள் அயற் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு தூது சொல்ல "புறாத்தூது" அனுப்பினர் என வரலாறு கூறுகின்றது. அந்நிலை கனவு நிலைக்குத் தள்ளப்பட்டு மறையப் பெற்றுள்ளது. தெலைபேசி இவ்வுலகில் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது. இப்பொழுது தெலைபேசி இன்றியமையாத தாகிவிட்டது. மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள அறிவியல் வளர்ச்சியின் பெறுபேறாக கணனியைக் குறிப்பிடலாம்.

இன்றைய உலகமானது விஞ்ஞான உலகிலிருந்து முன்னேறி கணினி உலகமாக மாறி வீறுநடை போடுகின்றது. ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள நாடுகளெல்லாம் சுருங்கி அரை நொடியில் கையடக்கத் தொலைபேசியின் கட்டமைப் புக்குள் நுனிவிரலின் அழுத்தத்திற்கு அடங்கி ஒடுங்கி ஆணைக்குக் காத்துக் கிடக்கின்றது. இன்ரனெட் என்றும் ஈமெயில் என்றும் இன்னோரன்ன நவீனத்திற்கு நுனிவிரலின் செயற்பாடே மூலகாரணமாகின்றது. இவ்வா றான அறிவியல் துறையுடன் எதிர்கால சமூகம் இணையும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

"கணினி மனிதர்களை முந்திச் செல்லும்" என்ற புதிய தகவல் வெளிவந் துள்ளது. கணினியைக் கொண்டே எதனையும் செய்து விடலாம் அது இல்லை யென்றால் உலகிலே எதுவுமில்லை என்ற இக்காலத்திலே இச்செய்தி சமுதாயத்திற்கு அச்சத்தை உண்டு பண்ணியுள்ளது.


கணினித் துறையும், தகவல் தொழில் நுட்பமும் அசுரவேகத்தில் வளர்ச்சி அடைந்தால் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்று ஆராய்ச்சியை மேற் கொண்ட "ரேகர்ஸ் டிவல்" அதன் முடிவாக வெளியிட்டுள்ள தகவலில் கணினி மற்றும் ரோபோ தொழில் நுட்பங்கள் தினம் தினம் புதிய பரிணாமத்தைச் சந்திக்கின்றன. இப் புதிய போக்குத் தொடருமானால் எதிர்காலம் கணினிகள் காலம் என்றே உறுதியாகக் கூறலாம். கணினி வடிவமைப்பாளர்கள் இலகுவில் அதிக திறன் மிக்க பல புதிய விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கும், அடைவதற்கும் பொருத் தமான வசதிகள் அடங்கிய வேறுபட்ட வடிவங்களைக் கொண்ட புதிய கணினிகளை உலகெங்கும் தயாரித்து வழங்குகின்றனர். இது சிறிது சிறிதாக மாற்றமடைந்து நவீன கணினிகளைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் கணினிகளே ஈடுபட ஆரம்பிப்பதுடன் ஏனைய ஆராய்ச் சிகளையும் மனிதனின் உதவியின்றி உடனே மேற்கொள்ளவும் தங்களைத் தாங்களே உருவாக்கும் தொழிலிலும் கணினிகள் ஈடுபடும் இத்தகைய வேகமான கணினித்துறையின் அதிரடி வளர்ச்சியால் 2029இல் கணினி மனிதர்களை முந்திச் செல்லும் என நம்பப்படுகின்றது. எனவே அறிவியலின் வளர்ச்சி மனித சமுதா யத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது.

நூல்களை வாசித்து அறிவைத் திரட்டிய காலம் மலையேறி விட்டது. சகலவித அறிவியல் உண்மைகளையும் இணையத் தினூடாக அறியப்பெறுகின்றார்கள். எனவே 21ம் நூற்றாண்டின் அதிதுரித வளர்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தின் மைல் கல்லாக கணினி முக்கியம் பெறுவதோடு இவ்வுயிரற்ற சாசனம் இன்று உலகினையே ஆட்டு விக்கின்றது. அறிவியல் துறையின் சிறப்பிடமான கணினி இன்று அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது. இலத்திரன் செய்திப் பரிமாற்றம் மற்றும் இணையம் என்பனவும் கணினிக்குள் அடங்கியுள்ளன.

இன்று உலகின் அபிவிருத்திய டைந்த நாடுகளான ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் டிஜிட்டல் (எண்மானம்) துறையில் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளன. இதனால் ரோபோக்கள் என்ற புதிய குழந்தைப் பிரசவமானது அக் குழந்தை படிப் படியாக வளர்ச்சிபெற்று இன்று அத்தனை வேலைகளையும் அதிநவீன முறையில் இலகுவாக ஆற்றிவருகின்றது. கட்டளை



களைப் புரிந்து கொண்டு

பணியாற்றுதல், விளை யாடுதல், வாகனங்களைச் செலுத்துதல், விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளல் என அதன் அரிய பணிகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

ரேகஸ்வெல் என்பவர் அமெரிக்கா வைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் இவர் எதிர்காலவியல் தொடர்பான விடயங்க ளைக் கூறும் நிபுணர். இவர் என்ன சொல்கின்றார் தெரியுமா? அறிய ஆவலாக உள்ளதா? படியுங்கள் “இன்னும் பதினெட்டு ஆண்டுக ளில் எதிர்கால சமுதாயத்தினை கணினி முந்திச் செல்லும் என்கின்றார். இது அனைவ ரையும் ஆச்சரியத்திற்குட் படுத்தியுள்ள செய்தியாகும்.

அறிவியலின் இன்றைய விந்தை மிகு வளர்ச்சியினால் வைத்தியத்துறை சம காலத்திலும் எதிர்காலத்திலும் சாதனை கள் படைக்கின்றது. எதிர் காலத்தில் கணினியின் துணை கொண்டு துல்லிய மான சிகிச்சையின் ஊடாக நோய்களை இனங் காணவும், கட்டுப் படுத்தவும், சிகிச்சை யளிக்கவும் முடியும். இதனால் பாரதூரமான நோய்களை இல்லாமல் செய்வதுடன் மனிதனின் ஆயுட்காலமும் அதிகரிக்கும். இரவல் இதயம், இரவல் சிறுநீர்ப்பை என்று செயலிழந்த உறுப்புக்களுக்குப் பதில் உறுப்புக்களைப் பொருத்தி சத்திர சிகிச்சை செய்யும் அளவிற்கு அறிவியல் வளர்ந்துள்ளது.

இயந்திரம் ஒன்றின் செயலிழந்த பாகங்களை மாற்றுவது போல அறிவியல் இன்று மனித உடல் அங்கங்களையும்

மாற்றக் கூடிய வல்லமை பெறுகின்றது. இன்று மருத்துவ உலகிலே அனைவராலும் அதிசயத்துப் பேசப்படும் முக்கிய விடயமாக "குளோளிங்" முறை கருதப்படுகின்றது. இயற்கையையே தன்வசமாக்கி மனிதருள் புது உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இம்முறை காரணமாக இன்று பலதரப்பட்ட பிரச்சினைகள் உருவாகியுள்ள போதும், தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதனானவன் தன்னை ஒத்த இன்னொரு மனிதனை உருவாக்கும் அளவு முன்னேறியுள்ளான் என்றால் அது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இதற்கு மாறாக, ஆண்டாண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த மனித கலாசாரம் அழிவுறும் என்பதில் ஐயமில்லை. கடவுளின் சக்திக்கு மேலாகத் தன்னை நினைத்து மனிதன் செய்கின்ற மடமைத்தனமான செயலானது மனித குலத்திற்கான அழிவுப்பாதை வெகு தொலைவில் இல்லை என்பதை அறிவிப்பதற்கான முதற்படியாகவே உள்ளது. இச் செயற்பாடானது சின்னக் குழந்தையானது தனது கைகளாலே மீண்டும் மீண்டும் தன் கண்களைக் குத்திக் கொள்வது போன்றுள்ளமை வேடிக்கையா னதாகும்.

அடுத்து "மரபணு சிகிச்சை" என்னும் பேரில் தற்போது அறிமுகமாகி யுள்ள சிகிச்சையானது மனிதனின் பாரம்பரிய இயல்புகளையே மாற்றும் அளவிற்கு ஆற்றல் மிக்கது. தொழில் நுட்பத்தின் உச்சக்கட்டமாக இன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இச்சிகிச்சை முறையானது எதிர்கால சந்ததியினரின் மனத்தில் பாரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று இப்பூமி இறப்பே அறியாப் பூமியாக மாறுவதில் அறிவியல் துறையினதும் தொழில்நுட்பத் துறையினதும் பங்கு அளப்பரியது. மரணம் வாழ்வின் முடிவாக இருந்த காலம் மாறி "சாவிற்கே சாவுமணி" அடிப்பது போல் மருத்துவ உலகம் வளர்ச்சி கண்டுள்ளது.

"இதய அறுவைச் சிகிச்சை" என்றால் அது ஒரு பெரிய புனர் ஜென்ம விசயமாக அக்காலத்தில் கருதினர். இன்று இதயத்தை வெளியே எடுத்து பொறுமை யாகப் பழுது பார்த்து இயங்கவைக்கின்றனர் நம் மருத்துவர்கள் இதற்குக் காரண மென்ன? அறிவியலின் விந்தையென்றே நாம் கூறலாம். அறிவியல் "உண்மையா னது ஆனால் ஆபத்தானது" என்கின்றார் பி.ஜி.சா. உடலில் உள்ள அனைத்து உறுப்புக் களையும் பண்டமாற்று முறைபோல் மாற்றிப் பொருந்தும் அளவிற்கு அறிவியல் வளர்ந்துள்ளது. அறுவைச் சிகிச்சையையும் மீறி "லேசர்" கருவி கொண்டு நவீன வளர்ச்சியில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. "உணவே மருந்து" "மருந்தே உணவு" என்னும் மொழி அழகாகச் சுருக்கமாக ஆழ்ந்த அர்த்த முடைய உண்மைகளை நமக்கு வெளிப் படுத்துகின்றது.

மனிதன் இயந்திரத்தினை இயக்கிய காலம் முடிந்து விந்தையான மனித இயந்திரம் மனிதனை இயக்கக் கூடிய காலம் மலர்ந்துள்ளது. அதிகரித்துச் செல்லும் மனிதத் தேவைகளை இலகு படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அறிவியலின் சாதனையான விந்தையான கணினிகள் ஒரு கட்டத்தில் மனித அழிவுகளுக்கும் காரணமாக அமையலாம். எனவே கணினிகளும் ரோபோக்களும் எதிர்காலத்தில் மனிதர்களுக்குப் பல்வேறு சட்டங்களை உருவாக்கப் போகின்றன என்பது நன்குபுரிகின்றது. ஆகவே இது குறித்த விடயங்களில் நாம் எச்சரிக்கையாக இருப்பது சாலச்சிறந்தது.

அடுத்து அறிவியல் துறையின் வளர்ச்சியில் தொலைபேசி சமுதாயத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரிடையே மிகப் பெரிய பங்களிப்பை யாற்றுகின்றது. தற்போது தொலைபேசி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகி விட்டது. பிறரோடு அவசரத்தில் தொடர்பு கொள்வதில் பெரும் பணியாற்றுகின்றது. தொலைபெசி மிகத் தொலைவில்லுள் ளோரையும் காலதாமதமின்றி நேருக்கு நேராகப் பேசும் அனுபவத்தைக் கொடுக் கின்றது. தொலைபேசி இருப்பதால் செலவும், நேரமும், சிரமமும் மீதியாகின் றது. உலக முழுமைக்கும் சமகாலத்தில் மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். சில கையடக்கத் தொலை பேசியில் புகைப்படம் எடுக்கும் வசதிகள் உள்ளன. சிலர் பொழுது போக்குக் கருவியாகவும் இதனைப் பயன்படுத்து கின்றனர்.

அறிவியல் உலகில் இன்று தொலைத் தொடர்பு கண்ட வளர்ச்சியி னால் உலகம் மிகச் சிறிய பரப்புடையதாக விளங்குகின்றது. "உலகம் கிராமமாக" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று வரிகளின் உண்மை புலப்படுகின்றது. எத்துறையினரும், யாவரும் இப்புதிய அறிவியல் வளர்ச்சியில் பயன் பெறுகின்றனர்.

ஆனால் அளவோடு எரிந்தால் அது விளக்கு அளவுமீறினால் அது நெருப்பு அதுபோலவே அறிவியலும் மனிதன் அடக்கியாளும் நிலையிலிருப்பின் அது மனிதனுக்கு உயர்வு. இந்நிலை மாறி இவை மனிதனைக் கட்டுப்படுத்தும் நிலை தோன்றின் அது மனிதனுக்குத் தாழ்வு.

மிருகத்தனமான இழி நிலைக்கு மனிதன் ஆளாவதற்கு தொடர்பு சாதனமும் ஒரு காரணமாயமைகின்றது. வளர்ந்து வரும் மாணவ சமுதாயம் மிகவும் விளிப்புடன் இருப்பது அவசியமாகின்றது. எமது நாட்டில் இடம் பெறும் சிறுவர்களுக்கிடை யிலான பாலியல் உறவு, அன்போடு பெற்ற வளர்த்த தாய்தந்தையரேயே படுகொலை செய்யும் அளவிற்குத் தூண்டியுள்ளமை மனவேதனைக் குரிய விடயமாகும்.

அடுத்து அறிவியலின் வளர்ச்சியி னால் அறிமுகப்படுத்தப்பட்ட அணுவாயு தமானது இன்று தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக உலகையே அச்சுறுத்தி வருகின்றது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சிப் படிகள் காரணமாக அணு வாயுதப் பாவனை முறையும் பல்வேறு விதமான புதுமையான முறை மூலமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இன்று பல வல்லரசு நாடுகள் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அணு வாயுதப் பயன்பாடே மூலகாரணமாகும். அத்தோடு கதிரியக்கப் பரிசோதனைகள் நீருக்கடியில் நடாத் தப்படுவதன் விளைவாக நீர் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவதோடு ஈற்றில் அது உணவுச் சங்கிலி வழியாக மீண்டும் மனிதனையே அடைவதால் மனித சமுதாயமே பாதிப்புற நேருகின்றது.


இவ்வாறு அறிவியல் துறையானது பல்வேறு விதமாக வளர்ந்து விட்ட போதி லும் அதன் பாதக விளைவுகளையும் எடுத் துக் கூற வேண்டியுள்ளது. தொழிற் சாலைகளிலிருந்தும், வாகனங் களிலி ருந்தும், வானூர்திகளிலிருந்தும் வெளி விடப்படும் புகையும் கழிவுகளும் இன்று சூழலை மாசுபடுத்துகின்றன. புவியில் இன்று வெப்பம் அதிகரிக்கப்பட்டு துருவப் பிரதேசங் களில் பனிப் பாறைகள் உருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வளியில் காபனீரெட்சைட்டு வாயுவின் அதிகரிப்பும், ஓசோன் படையின் ஓட்டையும், பச்சை வீட்டு விளைவும் அறிவி யல் வளர்ச்சியான விஞ்ஞானத்தில் எதிர் நோக்கப்படுகின்ற பாதக விளைவு களாகின்றன.

அறிவியலின் விந்தை மனிதன் இன்று புவியிலிருந்து சந்திரனுக்கும், வேற்றுக் கிரகங்களுக்கும் செல்ல வழிவகுத்துள்ளது. குழந்தைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாக்காட்டி மகிழ்வித்த காலம் மாறி நிலாவிலும் கால்பதிக்கும் அளவிற்கு காலம் மாறி விட்டது. இன்று விண்வெளி ஆய்வு பலத்த வளர்ச்சி கண்டுள்ளது. வருடம் தொறும் எண்ணற்ற விண்கலங் களும், றொக்கட்டுக்களும் விண்ணிற்கு ஏவப்பட்டும் விண்ணில் சஞ்சரித்த வண்ணமாயும் திகழ்கின்றன. விண்ணிலே துணைக் கோள்களையும் ஆய்வுக் கோள்களையும் அனுப்புவது மாபெரும் வெற்றியாகும். செய்மதிகள் விண்ணிலே வலம் வருகின்றன. புவியில் ஏற்படும் வானிலை, காலநிலை மாறுதல்களையும் இயற்கை அனர்த்தங் களையும் புவிக்கு விண்ணிலிருந்து அறியத் தந்த வண்ண மாகச் செய்மதிகள் தொழிற் படுகின்றன. இந்த வகையில் இவ்வறிவியல் வளர்ச்சியினால் எதிர்கால சமுதாயம் நன்மை அடையும் அதே வேளை "எந்த விசைக்கும் எதிரும் சமமுமான மறுதாக்கம் இருக்கும்" என நியூட்டனின் மூன்றாவது விதி கூறுவது போல் விஞ்ஞான அறிவியல் ஆக்க பூர்வமான பாதையினை நோக்கி வளர்ந்தாலும் பாதக விளைவுகளும் ஏற்படுவதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அறிவியல் வளர்ந்து விட்ட போதிலும் அது சாதிக்க வேண்டியவை இன்னும் பலவுள்ளன.

எனவே உலகின் முடி சூடா மன்னர்களாகிய நாம் விஞ்ஞான அறிவி னாலும் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் புதுயுகம் படைப்போம் இவ்வுலகினையே அமைதிப் பூங்காவாக மாற்றிடுவோம்.



- வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையாயினும் அதற்கு வளைந்து கொடுங்கள் முறிந்து விடாதீர்கள்.
- உங்களின் திறமைகளைக் கட்டியெழுப்பி அவற்றை மேற்கொண்டுவரப் பாருங்கள். அயர்ந்துவிடாதீர்கள்.
- உங்கள் வாழ்க்கையில் அடைய வேண்டிய குறிக்கோளை ஏற்படுத்தி அதற்கேற்ப துடுப்பினை களைக்காது, சலிக்காது வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கோடு கப்பலை பெரும் புயலின் வழியே நகர்த்துங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை மனிதனின் எதிர்கால சமுதாயத்திற்கு



செல்வி. நிசாந்தினி நடேசலிங்கம்
வயது – 18
மட்/செங்கலடி மத்திய கல்லூரி
செங்கலடி.

கவிதைப் போட்டி சிரேஷ்ட பிரிவு
முதலாம் இடம்



நடத்தையை மாற்றாமால்
பலனை எதிர்பார்த்தால்
ஒரு வகை வைத்திய நிலை
செத்த குதிரையை மீண்டும் அடித்து
வெற்றி இலக்கை நோக்கி
ஓட வைப்பது சாத்தியமற்றது போல

யுத்தம் அதன் பன்முகத்தையும்
காட்டியிருக்கிறது நமது மண்ணில்
யுத்த அழிவுகளின் உண்மையை
தேடி அலையும் அதே வேளை
யுத்தத்திற்கு பின்னரான சூழல்

முகம் தெரியாத தடையம் இல்லாத
பயம் உறுத்தாத நச்சு வலையை
நமது மண்ணில் விரித்து வைக்க
விட்டில் பூச்சிகளாக விழுந்து கொண்டிருக்கிறது
எமது சமூகம்

சுயநலம் சுயமுனைப்பு
தன்வளர்ச்சி உடனடி ஆதாயம்
புகழ் திறமைகள் வளங்கள்
தன்சார் வளர்ச்சிக்கு மட்டும் உபயோகித்தல் என்ற
தன் முனைப்பு வாதத்தை விசமாக
வளர விட்டிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப்பின் தடங்கள
தியாகத்தின் வேர்கள்
பணியின் தேவைகள்
உறவின் பிணைப்புகள்
கருகட்டும்
பிரசவிக்கும்
காலமாக இது இருக்க வேண்டும்
ஆனால் யதார்த்தம் என்ன?

அன்பும் இன்றி
தியாகமும் இன்றி
பணியும் இன்றி
உறவும் இன்றி
பிறப்பில் அர்த்தமின்றி அலைகிறோம்

சமாதான தூதுவர்களை
கடும் சம்பவங்கள் வழியே அழைத்து
அதிகார இருக்கையில்
அமர வைத்து அழகு பார்க்கின்றோம்

பொருளாதார வளர்ச்சி
விலை குறைந்த தங்க வேட்டை
போட்டியாக ஒழுங்கமைக்கப்பட்ட

நிகழ்ச்சி நிரல் திருநாட்கள்
தெருவை நிறைக்கும் வாகனம்
புழுதிகள் பவனிகள் உலாக்கள்

நடுவே....
பசிக் கொடுமை
வன்புணர்வு
கையறுநிலை

கொலை
வகை தொகையற்ற துஷ்பிரயோகங்கள்
நிலமற்ற நிம்மதி அற்ற வாழ்வு
அழகையும் துயரமும்
வாசலுக்கு வெளியே பாய் விரித்திருக்கிறது

போரும் அதன் புழுதியும்
போர் தின்ற மானுடனும்
சமூகத்தின் இருப்பும்
உலகத்தில் நின்று உரத்த குரலில்
அழுது வெடிக்கின்ற பொழுது ஒன்றில் ஏந்தி
விந்தை மனிதனுக்காக
காத்திருக்கின்றோம்
எதிர்கால சமூகத்திற்கு...............??

## கனிஷ்ட பிரிவு கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற வெற்றியாளர் விபரம்

**கனிஷ்ட பிரிவு – கவிதை பாடல்**



பிரபாகரன் திவ்வியபாரதி
வயது - 12
மட்/மகாஜனக் கல்லூரி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தையான மனிதன் நாளைய சமுதாயத்திற்கு



செல்வி.அமீனுதீன் பாத்திமா ஹாபிழா
வயது - 18
பாத்திமா ஸஹ்ரா பெண்கள் அரபுக்கல்லூரி.
வாழைச்சேனை.

கட்டுரைப்போட்டி
சிரேஷ்ட பிரிவு
முதலாம் இடம்

"சோக்கிரடிஸ் பிளேட்டோவுக்குக் கற்றுக்கொடுத்தார். பிளேட்டோ அரிஸ்ரோட் டிலுக்குக் கற்றுக் கொடுத்தார். அரிஸ்ரோட்டில் மாபெரும் வீரன் அலெக்சாண்டருக்குக் கற்றுக் கொடுத்தார். ஆக, ஞானம் என்பது பின்வருகிற சந்ததிகளுக்கு தரப்படாமல் இருந்தால் அது மறைந்தே போயிருக்கும். நமது மாபெரும் பொறுப்பே எதிர்காலத் தலை முறையினர் பெருமையோடு சொல்லிக் கொள்ளும் அடிச்சுவடொன்றை விட்டுச் செல்வதே ஆகும்" - ஷிவ் கெரா



சாதனை என்பது ஒவ்வொரு இள நெஞ்சினதும் துடிப்பு. நேற்றைய சாதனையாளர்கள் இவர்களுடைய விந்தைகளை இன்று உலகிற்கு விட்டுச் சென்றதைப் போல் இன்றைய விந்தையான மனிதர்கள் தான் நாளை சாதனை படைக்கப் போகின்றவர்கள். அதாவது நாளைய சமுதாயத்தின் விந்தை யான மனிதர்கள் யார் என்றால், இன் றைய எமது 'இளம் சந்ததி' யினராவர்.

விந்தை என்பது புதுமை யான படைப்புக்களாக, கண்டுபிடிப்புக்களாக, அதிசயங்க ளாக ஏன் சிந்தனைகளாகவும், கருத்துக்களாகவும் கூட நிகழ்த்தப் படலாம். ஆக்கம், அழிவு என்ற இரண்டை யுமே தாரக மந்திரங்களாகக் கொண்டு அசுர வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் காலச் சக்கரத்தின் அச்சாணியாய் இருந்து அதனை இயக்கும் சக்தியை மனிதன் பெற்றிருக்கின் றான். தனிமையாகவே பிறந்து தனிமையா கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போகின்ற மனிதன் அவனின் விந்தைகளின் மூலம் மட்டுமே உலகினால் அறியப்படுகின்றான். கருவறையில் விந்தாகக் கருக்கொண்டு முகம், சதைப்பிண்டம் என உருமாறி அவன் முழுமை அடைந்து இறக்கும் வரையில் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்து செல்கின்றான். இந்த அடிப்படையில் மனிதனின் ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டமும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதிலும் குறிப்பாக இளமைப் பருவம் என்பது மிகவும் பயிற்றப்பட வேண்டிய, நெறிப்படுத்தப்பட வேண்டிய, வழிகாட்டப்பட வேண்டிய ஒரு பருவமாகும். அவை முறையாக நடைபெறுகின்றபோது தான் நாளைய உலகம் விந்தையான மனிதர் களைப் பெற்றுக்கொள்ளும்.

அவ்வாறான விந்தையான மனிதர்கள் உருவாவதற்கும், அறிமுகப்படுத்தப்படுவதற் கும் கடந்த காலங்களில் சாதனைபடைத்த மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் புரட்டப்பட வேண்டும். அவர்களது சாதனைக ளின் பின்னணிகளை ஆராய்ந்தறிய வேண்டும்.

விந்தை மனிதனொருவனின் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என நோக்குங்கால் முதலாவதாக, அவனது உள்ளம் ஓர் குறித்த இலட்சியத்தை எண்ண மாகக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தாம் பெற்றுள்ள வாழ்க்கைக் காலத்தைக் கழிக்கும் வழியானது அவனது எண்ணத்திலேயே தங்கியுள்ளது. "மனிதன் தனது மன நிலையை மாற்றிக் கொள்வதன் மூலம் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ளமுடியும் என்பது எமது தலை முறையினரின் மிகப் பெரிய கண்டு பிடிப்பாகும்"(வில்லியம் ஜேம்ஸ்- ஹவார்ட் பல்கலைக்கழகம்)

எவ்வாறு ஒரு சிற்பியின் மனதில் உருவாகும் எண்ணம் இறுதியில் சலவைக் கல்லில் உருவமாக அமைகின்றதோ அது போன்று ஒவ்வொரு மனிதரும் எண்ணும் எண்ணங்களும், காணும் கனவுகளும் ஒரு காலத்திலில்லாவிட்டாலும் இன்னுமொரு காலத்திலாவது உருவாகிவிடும் என்பதில் ஐயமில்லை. கடந்த காலங்களில் பல விந்தையான செயற்பாடுகளை நிகழ்த்திய மாமனிதர்களின் வரலாறுகளையெல்லாம் பார்க்கின்ற போது அவர்கள் தாங்கள் யாராக இவ்வுலகில் வாழ வேண்டுமென்ற குறிக்கோள் கொண்டார்களோ அந்தக் குறிக்கோளின் மீதே தங்களின் முழுக்கவனத்தையும் செலுத்தி அதன் காரணமாகவே அவர்கள் வெற்றியடைந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது."எந்த துறை முகத்திற்கு செல்ல வேண்டுமென்று திடப்படுத்திக் கொள்ளாத மாலுமிக்கு ஏற்ற வண்ணம் காற்று வீசுவதில்லை" என்ற பழமொழிக்கேற்ப வாழ்க்கையை ஒரு குறிக்கோள் இல்லாமலே கழித்துவிட்டவர் களின் நிலை ஆதரவற்றதாகவே கழிந்த துடன். அவ்வாறானவர்களின் வரலாறே அடியோடு அழிந்துபோன சம்பவங்களுமுண்டு.

இன்று எமது கைகளிலே தவளு கின்ற, தற்காலத்தை ஆட்சி செய்கின்ற விந்தைப் படைப்புக்களான விமானம், வானொலி, திரைப்படம், மின்னியல் என அனைத்துமே அன்றைய விந்தை மனிதர் களின் கற்பனையில் தோன்றிய படங்களா கவே இருந்தன. அதன் பின் அவர்கள் அவற்றை உண்மை உருவில் எய்தப்பெற வேண்டுமென்று தகிக்கும் ஆவல் கொண்டனர். அந்த ஆவல் அதனை எய்தும் முறையில் செயலாற்று மாறு பிடர் பிடித்து உந்தியது. அதற்காக அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் அவனது மூளையின் வன்மையைப் பன்மடங்கு வலுப்பெறச் செய்தது. அவனு டைய தகிக்கும் ஆவல் அவனை அவனுடைய குறிக்கோளை நோக்கி அடியெடுத்து வைக்குமாறு செய்தது. அதன் விளை வாகக்கிடைத்தவைதான் இன்று நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கும் அனைத்துப் படைப்புகளும்.

"தங்கள் கனவின் அழகின் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கே எதிர் காலம் உரியது." என – எலினார் ரூஸ்வெல்ட்- கூறியது போல எவரெஸ்டின் மீது ஏறி நின்று அதனைத் தன்காலடியின் கீழ்க்கொண்டு வெற்றிபெற வேண்டுமென்று 'டென்சிங்' இளமையிலிருந்து கண்டுவந்த கனவுதான் பின்பு நனவானது. அது போலவே இன்று வீடுகளில் பயன்படுத்திவருகின்ற எனாமல் பீங்கான்களைக் கண்டுபிடித்துப் பெருவாரி யாக உலகிற்கு அளித்தவன் 'பெர்னாட் பாலிஸ்ஸி' என்ற பிரெஞ்சுக்கா ரனாவான். அவன் ஒரு பழைய இத்தாலிப் பாத்திரத்தைக் கண்ணுற்றதும் அவனுடைய கற்பனையில் எனாமல் பற்றிய எண்ணம் தோன்றியது. உடனே அதனை உருவாக் கும் பணியில் ஈடுபட்டான். உலகுக்கு அவனது விந்தையை முன்வைத்தான். அவ்வாறுதான் 'ஜோன் லூயி பயர்ட்' எனும் கொட்லாந்துக்காரன் தான் கற்பனையில் கொண்டிருந்த டெலிவிஷன் பற்றிய படத்தை எண்ணத் தொலையா இன்னல்களையும், இடும்பைகளையும் பொறுத்துக்கொண்டு இரும்பு நிகர் இதய உறுதியுடன் தன் குறிக்கோளை நோக்கிச் சென்று உருவமைத்தான். அவன் அதனைதன் இலட்சியமாகக் கொண்டிருக்காவிடில் இன்று ஏராளமான படைப்புக்கள் மத்தியிலும் அரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் அற்புதமான படைப்பு எமக்குக் கிடைத் திருக்கமாட்டா தல்லவா! எனவேதான் 'விவேகானந்தர்', "நீ உன்னுடைய குறிக்கோளில்வெற்றியடைய வேண்டும் என்றால் அந்தக்குறிக்கோள் உன் குருதி யோடு குருதியாக ஓடி உன் உடல் முழுவதும் பரவி உன்னுடைய ஒவ்வொரு மயிர்க்காம்பின் வழியாகவும் வெளியேற வேண்டும்." என்று இயம்பினார்.

விந்தைகளின் மூலம் உலகைச் செழிக்க வைக்கக் கனவு காணுகின்ற மனிதன் ஒரு குறிக்கோளை நோக்கிப் பயணிக்கின்ற அதேவேளை அதன் மீது அசையா நம்பிக்கையும் வைக்க வேண்டும். எந்தவொரு சவாலாகினும் புயலாகக் கிளம்பு கின்ற பொழுது ஆட்டம் காணாத உறுதி அவனது மனதை ஆட்சிசெய்ய வேண்டும். அப்போதுதான் எத்தடைகள் வரினும் முன்னோக்கி நகரக்கூடிய விந்தை மனிதர்களைக் கொண்ட உலகம் உருவாகும். 'ஹர்வர்டு' பல்கலைக் கழகத் தின் புகழ் பெற்ற தத்துவஞானியும், மன இயல்நிபுணருமான 'வில்லியம் ஜேம்ஸ்' இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சிந்தனை யாளர் என்று பலராலும் பாராட்டப்பட்டவர். அவர் இடை விடாமல் சொல்வார் "நம்பிக்கைக்கு படைக்கும்திறன் உண்டு எந்த ஒரு செயல்திட்டத்திலும் மிக முக்கியமான அம்சம் நம்பிக்கையாகும். நம்பிக்கை இல்லாவிட்டால் விளைவு வெற்றிகரமாக இராது. இது அடிப்படையான விடயம்" அதனால்தான் காந்தி அடிகள் கூட அகிம்சா ஆயுதத்தின் மீது கொண்ட நம்பிக்கையினால் இந்தியாவிற்கே சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்கள். அவர் ஒரு தடவை சென்னை 'தியாகராஜ' நகரில் பேசும் பொழுது, "அணுகுண்டை மிகவும் வன்மை வாய்ந்த ஆயுதமென்று கூறுகிறார்கள். அவ்விதமானால் என்னுடைய அகிம்சா தத்துவம் என்ன?" என்று தம் கைகளை வீசி உணர்ச்சியுடன் கூறினார். அவ்விதமானால் அவர் அகிம்சாத் தத்துவத்தின் மீது கொண்டிருந்த அசைக்க முடியாத 'நம்பிக்கை' அவரை எந்தளவிற்கு இயக்கியுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே நம்பிக்கைதான் அதிகமான விந்தை மனிதர்களின் அற்புத சாதனைக ளுக்குப் பின்னணியாக இருந்து இயங்கி யுள்ளது என்பதைத் தெட்டத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அதேபோல நம்பிக்கையும், 'விடா முயற்சியும்;' ஒன்றோடோன்று பின்னிப் பிணைந்த விடயம் என்ற வகையில் சாதனை படைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கும் ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் தனது குறிக்கோளுக்கான தகுந்த முடிவையும், சிறந்த விளைவையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் முறையான பயிற்சியையும், தொடரான முயற்சியையும் வாழ்வாகக்கொண்டிருப்பது அவசியமாகும்.

'எடிசன்' மின் குமிழைக் கண்டு பிடிக்க ஆயிரம் தடவைகளுக்கு மேல் தோல்வி அடைந்தார். எவ்வளவுதான் நம்பிக்கை இருந்தாலும் முதல் தோல்வி, இரண்டாவது மூன்றாவது என்றாகும் போது நம்பிக்கை இழக்கத்தானே செய்யும். ஆனால் ஆயிரம் அல்ல, இருபதாயிரம் தடவைகள் தோற்றிருந்தாலும் அவர் நம்பிக்கை இழந திருக்கமாட்டார். எடிசன் தோல்வி களிலிருந்து மீண்டு மின்குமிழைக் கண்டு பிடித்த பின்னர் கூறிய வார்த்தை "எனக்கு ஒருமின்குமிழ் எரியாமல் இருப்பதற்கான பத்தாயிரம் காரணங்கள் தெரியும்" என்பதுதான். எடிசன் மட்டும் தான் தோல்வி அடைந்ததாக எண்ணி விரக்தியடைந்து அவரது முயற்சியைக்கை விட்டிருந்தால் தற்போது இரவும் பகலாகத் தெரிகின்ற உலகத்தின் பகல்கள் கூட இரவாகிப் போயிருக்கும். உலகம் மிகவும் வேண்டிநின்ற விந்தைப்படைப்பை இழந்திருக்கும். அவ்வாறுதான் அமெரிக்கா வில் மத்தியதர வர்க்கத்தில் பிறந்த வில்பர்(1867) மற்றும் ஒலிவ்(1871) என்பவர்கள் இன்று 'ரைட்சகோதரர்கள்' என்று போற்றப்படக் காரணம், அவர்கள் ஆகாய விமானத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துவதில் கொண்ட விடாமுயற்சிதான். '1896ல் வொஷிங்டன் ஸ்மித் ஸோனிக்' விஞ்ஞான ஆய்வு மையத்தைச் சேர்ந்த 'சைமன் நிவ் கோம்ப', 'காற்றின் எடையை விடக் கூடிய எடை கொண்ட எதனையும் ஆகாயத்தில் பறக்கவிட முடியாது. என்று தர்க்க ரீதியாகவும், கணித ரீதியாகவும் நிரூபித்திருந்த போதிலும் அவர்கள் அவர்களது அயராத உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும், நிலைகுலையாத உள்ளத்தினாலும் உலகம் தேவையாகி நின்ற மிகப் பெரிய விந்தையை முன்வைத்து விட்டார்களல்லவா! எனவேதான் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும் போது அனைத்துச் சாதனைகளுக்குப் பின்னாலும் இயங்கிய ஒன்றாக 'விடாமுயற்சி' இருந்துள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. இன்னும் ஏராளமான சான்றோர்கள் தங்கள் கருத்துக்களிலும் கூட இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். வில்லியம் 'ஹெக்சன்' என்பவர், "நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது. முயலுங்கள். மீண்டும் மீண்டும் முயலுங்கள்" எனக் கூறுகின்றார். அதே போன்று 'பென்ஹான்' என்பவரும்", "விடாது முயலுங்கள் அஞ்ச வேண்டாம்" என்று பகர்கிறார். மேலும் 'செனேகா' என்பவர், அறிவுரை கூறும் போது, "விடா முயற்சியும், அறிவோடு கூடிய விடாக்கவனமும் வெல்ல முடியாதது எதுவுமே கிடையாது" என்கிறார். 'ஜான்சன்' என்பவரும் கூட "பெரும் செயல்கள் பலத்தால் செய்யப்பட வில்லை. விடா முயற்சியால் தான் ஆற்றப்பட்டிருக் கின்றன." என்று சொல்கிறார். இவ்வாறு ஏராளமான கடந்த காலத்தின் விந்தையான மனிதர்கள் தங்கள் பொன்னான கருத்துக்களின் மூலம் விடா முயற்சியையே பலமான ஆயுதமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதே போன்றுதான் பலவீனங்களாலும், தடைகளாலும் விந்தை மனிதன் செயற்பாடுகளைக் குன்றச் செய்ய முடியாது. சாதாரணமாக வாழ்ந்து விட்டுச் சென்றவர்களை விட வாழ்வில் அரிய சாதனைகளை ஆற்றிச் சென்ற படைப்பாளிகளின் வாழ்க்கைப் பின்னணிகளைப் பார்க்கும் போது அதிசயத்தில் கண்களை அகலவிரிக்கச் செய்கின்றது. அவர்களது துயரமான, தடைகள் நிறைந்த வாழ்க்கை. எடுத்துக்காட்டாக, இருகைகளையும் இழந்தும் கூட பெரும் நூலாசிரியராக விளங்கிய 'ஹரால்ட் ரஸ்ஸல்' என்பவரை எடுத்துக் கொள்ளலாம். கைகளை இழந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டோமே, இனி வாழ்ந்து என்ன பயன், என்று அவர் நினைத்திருந்தால் இன்றுவரை போற்றப்படும் மனிதராக அவரால் இருந்தி ருக்க முடியாமல் போயிருக்கும். ஊனமாகவே வாழ்ந்து, பயனற்றவராகவே இறந்த ஒருவராகத்தான் அவர் கருதப்பட்டிருப்பார். அது போலவே தான் 1914இல் தனது 67வது வயதில் தோமஸ் அல்வா எடிசன் கோடிக் கணக்கான டொலர்கள் மதிப்புள்ள தனது தொழிற்சாலையை தீயில் இழந்தார். வயதான மனிதரான எடிசன் தனது வாழ்நாள் முயற்சி யெல்லாம் தீயில் பொசிங் கிப் போவதைப் பார்த்துக் கொண்டே கூறினார் "நமது எல்லாத் தவறுகளும் பொசுங்கி விட்டன. இனி நாம் புதிதாக எதையும் தொடங்கலாம்." என்றார். அவர் தனக்கேற்பட்ட பெரும் இழப்பைக்கூட தனக்கு சாதகமாகவே கருதினார். அதனை அவர் ஒருபொருட்டாகவே எடுத்துக் கொள்ள வில்லை. அது போலவே தான் பிறந்து ஒருவாரத்திலேயே தத்துக் கொடுக்கப்பட்ட 'ஸ்டிவ் ஜொப்ஸ்' 1984ம் ஆண்டு 'மகின்டோஷ்' என்ற கணனியைக் கண்டு பிடித்து, 1985ல் அமெரிக்க அரசின் தொழில் நுட்பத்திற்ம், நுட்பத்திறன் புதுமையாக் கத்திற்கும் விருதையும் வென்று, 1986ல் 'நெக்ஸ்ட்' மற்றும்'பிக்சர்' நிறுவகங்களை ஆரம்பித்து பின்னர் அனிமேசன் படத்திற்கான ஒஸ்கார் விருது உட்பட பல விருதுகளை வென்று விந்தை மனிதரானார். ஒரு முறை 'ஸ்டீவ் ஜொப்ஸ்' கூறும் போது "கஷ்டங்கள் தான் என்னுள் இருந்த உள்ளுணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தன" என்று கூறினார். இவ்வாறு எந்தவொரு சாதனை படைக்கத் துடிக்கும் விந்தை உள்ளத்திற் கும் தடைகள் என்று எதுவுமே கிடையாது. அவற்றைக் கூட அவர்கள் தமது வெற்றிக் கான வழிகளாகவே ஆக்கிக்கொள்வர்.

இவ்வாறு இலட்சியம், தன் நம்பிக்கை, முயற்சி, தடைதாண்டல் என அனைத்து அம்சங்களையும் ஒருங்குசேரப் பெற்ற விந்தை மனிதர்களின் செயற்பாடு களால் உலகம் அடைகின்ற நன்மைகளை எடுத்துப் பார்க்கும் போது, நேற்றும், இன்றும் ஏன் நாளையும் கூட இவை உலகின் அசுர வளர்ச்சிக்கு வித்திடுபவையாக இருப்பத னைக் காணலாம். முன்பெல்லாம் ஒரு நூற்றாண்டுக்குப் பின் அடுத்தடுத்த நூற்றாண்டு களில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் தற்போது நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் அமோக வளர்ச்சியினை அடைந்துகொண்டு வருவத னைக் காணலாம். தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்று எந்தத் தொடர் பூடகங் களை எடுத்துப்பார்த்தாலும் அவை ஏதோ ஒரு விந்தையால் அலங்கரிக்கப்படாமல் காணப்படுவது அரிதாகவே உள்ளது.

நாம் இன்று அனுபவித்துக் கொண்டி ருக்கும் ஒவ்வொரு நவீன இயந்திரங்களும், கண்டு பிடிப்புகளும், படைப்புகளும் அன்று வாழ்ந்த விந்தை மனிதர்களால் ஆற்றப்பட்ட சாதனைகளேயாகும். மனிதன் தனது முழு உடல் பலத்தையும், சிலவிலங்குகளின் உதவியையுமே பயன்படுத்தி ஆற்றிய வேலை களெல்லாம் விந்தை மனிதனின் அற்புதப் படைப்புகளால் இன்று ஒரு ஆழியை அழுத்து வதன் மூலம் கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிவதானது சர்வ சாதாரணமாகிப் போய்விட்டது. முன்பெல்லாம் காகிதங்களில் கடிதங்களாக எழுதிப் பரிமாறப்பட்ட தகவல்க ளெல்லாம் தற்போது எந்த நாட்டில், எந்தக் கண்டத்தில் ஒருவர் இருந்த போதிலும் அருகருகே இருந்து பேசிக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்து விட்டன. பல மாதக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பிரயாணங்களெல்லாம் இன்று கண்ணிமைப் பொழுதிலேயே தலை சிறந்த படைப்புக்க ளில் ஒன்றாக 'டைம்ஸ்' அறிமுகப்படுத் தப்பட்டுள்ள Jet pack என்ற நவீனரக பறக்கும் இயந்திரத்தை 'க஌ென் மார்டின்' என்ற நியுசிலாந்து விந்தை மனிதன் சுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2438 மீற்றர்(8000அடி) உயரம்வரை பறக்கும் சக்தி கொண்டதாக கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் போராடிக் கண்டுபிடித்து உலகத்தில் அதற்கென இருந்த இடைவெளியை அடைந்துள்ளார்.

அண்மைக் காலமாக நிகழ்தப்பட்டு வருகின்ற விந்தைகள் ஒரு காலத்தில் கனவுகூடக் கண்டிருக்க முடியாத அதிசயமான, அபூர்வமான படைப்புக்களாகக் காணப்படுகின்றன. முக்கியமாக மனிதர்களைப் போல இயங்கக் கூடிய ரோபோக்கள் ஒரு அற்புதப்படைப்பாகவே கருதப்படுகின்றன. மனிதனால் ஆற்றப்பட்ட சகல வேலைகளையும் செய்யக் கூடிய சக்தி வாய்ந்தவையாக அவை உருவாக்கப்படுகின்றன. அதுபோல ஓட்டுநர் இன்றிச் செல்லும் கார்கள், நவீனரக விமானங்கள், அதிவேக இயந்திரங்கள் என அதிசயமான, வேலைகளை இன்னும் இன்னும் இலகுபடுத்துகின்ற பல படைப்புக்கள் இன்று துளிர் விட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் காரணமாகப் பல பாரிய வேலைகளெல்லாம் மிக இலகுவாக மேற்கொள்ளப்படுகின்றன. இவை வளர்ந்து விருட்சமாகிக் கிளை பரப்பி ஓங்கி உயர்வதானது நாளைய விந்தை மனிதனின் கைகளிலேயே தங்கியுள்ளது.

மேலும் தகவல் தொழில் நுட்பத் துறையில் இன்று நிகழ்ந்து வருகின்ற மாற்றமானது நாளைய தொழில் நுட்ப முன்னேற்றத்தில் நிகழவிருக்கின்ற மாபெரும் விந்தையான மாற்றத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. ஓர் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்த வண்ணமே முழு உலகையும் நோட்டமிடக் கூடிய மாபெரும் வளர்ச்சி நிகழ்த்தப்பட்டது கூட விந்தையான மனிதர்களின் சாதனையால் தான். நிமிடத்திற்கு நிமிடம் அபார முன்னேற்ற வளர்ச்சிகளை அடைந்து கொண்டு வரும் அத்துறையானது ஆழ் கடலிலும், அண்ட வெளியிலும்கூட அற்புதமான ஆய்வுகளை மேற்கொண்டு சாதனை நிகழ்த்தி வருகின்றது.

இவ்வாறான பல நன்மைகள் தரக்கூடிய புதுமைகளை நிகழ்த்துகின்ற ஆற்றல் விந்தையான மனிதனுக்கே உண்டு. அவன் தனது ஆக்கங்களை நாளுக்குநாள் புதிது புதிதாக முன்வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். 'ஸ்டிவ் ஜொப்ஸ்' கூறியது போல "புதுமை என்பது ஆயிரம் பொருட்களைப் புதியமுறையில் உற்று நோக்கி சிந்திக்கும் போது உருவாகிறது" எனவே ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனைகளைப் பதுமைப்படுத்தி, நன்மை தரக கூடிய பல வழிகளில் சிந்தித்து, பிரயோசனமாக வாழ்ந்துவிட்டுச் செல்ல வேண்டும்.

இவ்வாறு மனிதனிடம் காணப்படுகின்ற பல விந்தையான செயற்றிறன்கள் ஒரு பக்கத்தில் நேற்றும், இன்றும், நாளையும் உலகிற்கு நன்மைகளை அள்ளி வழங்கக் கூடியனவாக இருந்தும் கூட மறு பக்கத்தினால் மனிதரிடம் காணப்படுகின்ற ஆற்றல்கள் தவறான முறைகளில் பிரயோகிக்கப்படுகின்ற போது எதிர்மாற்றமான பல தீய விளைவுகளையும் உண்டு பண்ணத்தான் செய்கின்றன. இது மறுக்க முடியாததொரு உண்மையாகும். பல நாகரிகமற்ற அழுக்குக் கலாசாரங்களையும், முறைகேடான சீரழிவுகளையும், பாரிய அழிவுகளையும் அவை பல வேளைகளில் ஏற்படுத்தி விடுவதைப் பார்க்கலாம்.

இன்று வேலைகள் இலகுவாக்கப்படுகின்ற அதே வேளை மனித வாழ்க்கையில் ஓய்வே இல்லாததொரு நிலைமையும் உருவாகிவிட்டது. நவீனத்துவமும், ஆடம்பரங்களும் அதிகரிக்க அதிகரிக்க மனிதனின் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. உடலுக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி இல்லாததன் காரணமாகவும், பல்வேறு செயற்கை இயந்திரப் பயன்பாடுகளாலும் மனிதன் ஆரோக்கிய மற்றவனாக மாறிவருவதனைப் பார்க்கலாம். ஒரு விடயத்திற்குத் தீர்வாக அமைகின்ற கண்டுபிடிப்புக்கள் சில வேளைகளில் பல விடயங்களுக்குப் பாதிப்பைத் தரும் விடயங்களாகவும் அமைந்து விடுகின்றன. உதாரணமாக, உணவுப் பொருட்கள் பதப்படுத்தப்படுவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட பொருள் 'ஓசோன.' மண்டலத் தில் மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள் ளதைக் குறிப்பிடலாம். மேலும் இதில் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உட்கொள் வதால் உடல் நலக் குறைபாடுகளும் ஏற்படுகின்றன. அதே போன்று, இன்றைய விஞ்ஞானம் 'நவீன வேளாண்மைப் பசுமைப்புரட்சி' என்ற பெயரில் 1985 வருடங்களில் இரசாயனங்களைப் புகுத்தி அழிவை ஏற்படுத்தியது. விளை நிலம் சக்தியற்றும், அதில் விளையும் பொருட்கள் சத்துக்கள் இல்லாமல் இரசாயனமாகவும் இருக்கின்றது. 1980றகுப் பிறகு பிறந்தவர்களின் மலட்டுத்தன்மை அதிகரிக்க இரசாயனம் கலந்த உணவுப் பொருட்களே காரணம் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய யுகத்தில் 'ரோபோக்களின் விந்தையானது பெருமளவு வியத்தகு அனர்த்தங்களைப் புரிந்தாலும், அவற்றால் உலகம் இயற்கைத் தன்மையிலிருந்து மாறக்கூடிய, இயல்புக்கு மாற்றமான செயற்பாடுகள் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. மனிதர்கள் அல்லாமலேயே அவர்களால் ஆற்றப்படக் கூடிய அத்தனை வேலை களையும் செய்யும் ரோபோக்கள் உதிர் காலத்தில் அவற்றின் ஆதிக்கம் அதிகரித்து மனிதனின் தவறான விந்தைத் திறனால் ஒருவேளை அவற்றுக்கு மனித உணர்ச்சியும், சுயசிந்தனையும் கொடுக்கப்பட்டு விட்டால்!? உலகமே இயந்திரமயமாய் மாறிப் போகலாம் உலகின் சமநிலை குழம்பிப் போகும் அபாயமும் உருவாகலாம். தற்போது அதற்கான முயற்சிகள்தான் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அதனால் மனிதன் சரியான தூர நோக்குடன் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளான். நாளைய சமுதாயத் தின் செயற்கை விந்தை மனிதராக ரோபோக்கள் ஆகிவிடாமல் இருப்பதற்கும், அதனது தொழிற்பாட்டை பயனுள்ள வகையில் மாத்திரமே பயன்படுத்திக் கொள்வதற்கும் மனிதன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக விந்தை மனிதனின் மிகப் பயங்கரமான, நாசகாரக் கண்டு பிடிப்புத்தான் மனிதனை அழிக்கும், உலகை சேதப்படுத்தும் ஆயுதக் கண்டுபிடிப்பு. வகை வகையான ஆயுதங்களும், அணுகுண்டுப் புரளிகளும், பல்வேறு ரகமான பீரங்கிகளும் இன்று குடிக்கும் மனித உயிர்களோ எண்ணிலடங்காதவை. ஆதனால் ஒருபோதும் உலகிற்கு வளத்தை ஏற்படுத்திவிட முடியாது. அருமையான பல இயற்கை வளங்களையும், அபிவிருதத்தி அடைந்து வரும உலகின் அற்புதங்களையும், அதிக சேதத்திற்கு உட்படுத்தியதில் ஆயுதங்கள் முன்னணிவகிக்கின்றன. எதிர் காலத்திலும் கூட மனிதன் தனது விந்தையான ஆற்றல்களைச் சிந்தியாது பயன்படுத்து பவனாயின் இதைவிட பாரிய சேதங்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

இயற்கைப் பெருக்கத்திலும் கூட விந்தை மனிதன் கை வைத்திருப்பதானது ஒருசில சாதகங்களை வழங்கிவருகின்ற போதிலும் பெரும்பாலும் பாதகங்களையே விளைவித்துவருகின்றது. மனிதனின் பரம்பரை அழகில் மாற்றங்களை ஏற்படுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், அவன் பிறப்பதற்கு முன்னரே கருவறையில் வைத்து அவனது அவயங்கள் மற்றும் குணங்களை அவனது விருப்பத்திற்கு ஏற்றாற் போல் மாற்றியமைத்தல் போன்ற அரிய சாகசச் செயல்கள் எதிர்காலங்களில் இயல்புநிலைக்குப் புறம்பான பல விளைவுகளை ஏற்படுத்தலாம் மனிதர்களின் இயற்கையான விடயங்கள் மாற்றப்படும் போது உலகம் ஒரு வித்தியாசமான போக்கில் செல்லும் நிலை உருவாகி பாரிய சேதங்களை ஏற்படுத்தலாம்.

எனவேதான் விந்தை மனிதனானவன் தனக்குக் கிடைத்திருக்கும் அற்புதமான அரிய ஆளுமைகள், ஆற்றல்கள் மற்றும் திறன்களை அழிவு, பாதகம் மற்றும் மோசமான விளைவு என்பவற்றை நோக்காக் கொள்ளாது உலகை உயர்த்தக் கூடிய, செழிப்பை ஏற்படுத்தக் கூடிய, வளமான எதிர் காலத்தை உருவாக்க் கூடிய சேவைகளில் பயன்படுத்த வேண்டும்.

"உலகத்திற்குக் கேடு விளைவிக்காமல் புதிய தொழில் நுட்பங்களைக் கொண்டு பொருட்களை எருவாக்கி மனிதர்களின் வாழ்வைச் செழிப்பாக்குங்கள்" (ஸ்டிப் ஜொாக்ஸ்) உண்மையிலேயே உலகமானது இன்றும் சரி நாளையும் சரி விந்தையான மனிதர்களை வேண்டிக்கொண்டே இருக்கின்றது. அவனது பிரயோசனமான, ஆக்கபூர்வமான கண்டுபிடிப்புக்களையும், படைப்புக் கைளையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இன்னும் எத்தனையோ இடைவெளிகள் அவற்றை நிரப்பக் கூடிய விந்தை மனிதர்களை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றன. அவற்றை நிறைவாக்கி உலகைப் பூரணப்படுத்த வேண்டுமானால் தமது ஆற்றல்களை தேவையற்றவைகளில் பிரயோகிப்பதைக் கைவிட்டு ஆக்கபூர்வமான, பயனள்ள விடயங்களில் சாதனை நிகழ்த்தக் கூடிய இன்றைய இளம் சந்ததியினரை உருவாக்கி விட வேண்டும்.

நாளை உதிக்கவிருக்கும் எதிர்காலத்தின் விந்தை மனிதர்கள் இன்று வாழும் எமது இளையவலைமுறையினராவர். அவர்களை சிறந்த பிரயோசனமிக்கவர்களாக உருவாக்க வேணடடியமு இன்றைய விந்தை மனிதர்களின் தலையாய பொறுப்பாகும் அறிவு பூர்வமான உலகத்தை ஆட்டிப் படைக்கின்ற கல்விப் பந்தில் ஆடவிட்டுப் பார்த்தது ரசிக்கின்ற நிகழ்வுகளில் மூளை விருத்தியை ஏற்படுத்தி வித்தியாசமான முறைகளில் உருவாக்கப்படும் ஆக்க வினைகளை உருவாக்கி சாதனை படைக்க சிறுவர்களால் மட்டுமே முடியும்.

"புதியன புகுதலும் பழையன கழிதலும்" என்பதான விடயம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே எமது சமூகத்திலுள்ள இன்றைய இளம் சமூதத்தினரின் நாளைய எதிர்காலம் சிறந்து விளங்க சமூகத்திலுள்ள அனைவரும் பாடுபட வேண்டிய தேவை உள்ளது. சிந்தித்தல், செயலாற்றுதல் போன்ற விடயங்களில் கூடுதலான துடிப்பு சிறுவர்களிடையே காணப்படுகின்றது எமது வட்டத்திற்குள் அவர்கள் நுழையும் விதம் வித்தியாசமாகவுள்ளது. நல்லவற்றறை தெரிவு செய்து கொடுக்கின்ற பொறுப்புடன் பெரியவர்கள் இருப்பதால் தேர்வை மட்டும் செய்துவிட்டு செயலை அவர்களிடம் விட்டுவிட வேண்டும். அவர்களை சுததந்திர மாக சிந்திக்க விட வேண்டும். அப்போது இளம் சந்ததியினர் தமது வாழ்வினை அழித் துக் கொள்ளும், சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் செயல்களில் இறங்க நேரம் கிடையாமல் போய் நாளைய உலகின் சிறந்த, பயன்மிக் விந்தை மனிதர்களாய் மிளிர்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்வி உலகமானது ஒரு மனிதனின் உருவாக்கத்தில் பெரும் பங்களிப்புச் செய்கின்றது. அதனால் கல்வி மூலம் சிந்தனை மேம்படுத்தப்பட்டதொரு கல்விச் சமூகம்கட்டியெழுப்பப்படுதல் வேண்டும் விமர்சன நோக்குடன் கூடிய ஆக்க சிந்தனைக்கும், நுண்ணறிவுச் செயற் பாடுகளுக்கும் முன்னிடம் வழங்கப்படுதல் வேண்டும். புதிய அறிவுகள் கட்டியெழுப் பப்படுதல் வேண்டும். ஏதாவது புதிது புதிதாக சாதனை படைக்க வேண்டும். வாழ்நாளை வீணாள் ஆக்கிவிடக் கூடாது என்ற பலமான எண்ணக்கருவை அன்று வளர்ந்து வருகின்ற நாளைய விந்தை மனிதர்களின் உள்ளங்களில் பதித்துவிட வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆற்றல்களுக்கு ஏற்ப, ஒவ்வொரு துறைகளிலும் அவர்களுக்குள்ள ஆர்வங் களுக்கு ஏற்ப முறையாகப் பயிற்றப்பட் வேண்டும் அவர்கள் நாளைய சமுதாயத் திற்கு தேவைப்படுகின்றனர் என்ற அவசியத்தையும் அவர்களால் உலகம் அடைய வேண்டிய நன்மைகளையும் அவர்களின் பிஞ்சு உள்ளங்களிலே விதைத்துவிட வேண்டும்.

ஆனால் இன்றைய இளம் சந்ததியினரின் நிலையையும், அவர்கள் நடாத்தப்படும் முறைகளையும் பார்ப் போமானால் அது நாளைய விந்தை உலகத்திற்கு எதிரான ஒருநடை முறையாகவே காணப்படுகின்றது. நாட்டில் குடும்பக் கஸ்டம் காரணமாக வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. வேலைக்குச் செல்லும் சிறுவர்களின் எதிர்காலம்பற்றி பெற்றோர்கள் சிந்திக்காதனாலேயே கல்வி கற்கும் வயதில், சாதனை படைக்கப்பழகும் வயதில் கல்வியைத் தொலைத்து நிற்கின்றனர். இதனால் எமது சமூகத்தில் கெட்டிக்காரப்பிள்ளையாக இருந்தும் கல்வி கற்காமல் முடங்கிப் போவதனால் எமது சமூகத்தினை முன்னேற்றக் கூடிய சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றன. மூளை விருத்தி கூடிய சிறுவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு வசதி இல்லா மையினால் கல்வியிலும், முன்னேற்றத் திலும் பின்தங்கிய சமூகமாகவே என்றைக்கும் இருக்கக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

மேலும் தகவல் தொழில்நுட்பம் என்ற அதிவேக நெடுஞ்சாலையில் இளம் சமுதாயத்தினர் பயணித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இந்த தகவல் தொழில் நுட்பத்தினால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றிய கவனம் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன. சிறுவர்களுக்கான வீடியோ விளையாட்டுக்கள், கையடக்கத் தொலைபேசிகளுக்கு செய்தி பரிமாறுதல் போன்றன சிறுவர்களை நிரந்தரமாகவே மீளாத் துயரில் தள்ளி விடுகின்றன. துகவல் தொழில்நுட்ப புரட்சி முன்னேற்றம் கண்டுள்ள வேளையில் இதனால் ஏற்படக் கூடிய ஆரோக்கியக் கேடுகளை ஆபத்துக் களை இளம்' சமுதாயத்தினர் பெற்றுக் கொள்கின்றார்கள். இதன் காரணமாக சிந்திக்க வேண்டிய இளம் சமுதாயம் வெறும் சாதாரண மனிதர்களாக உருவாக வேண்டிய சூழல் ஏற்படும். உலகம் வேண்டி நிற்கும் விந்தையான மனிதர்கள் நாளைய சமதாயத்திற்கு கிடைக்காமல் போய் விடுவார்கள்.


எனவே நாளைய விந்தை மனிதர்களின் உருவாக்கத்தில் இன்று வாழ்கின்ற சமூகத்தின் பங்களிப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். திறமை இருந்தும் பாடசாலை செல்லாத மாணவர்களின் கல்வி தொடர்பிலும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதிலும் அது தொடர்பான தகைமை உள்ளவர்கள் முன்வந்து அக்கறைகாட்ட வேண்டும். அவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகள் மேம்படுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அவர்களை வெறுமையாக இருக்கவிடாது ஏதாவது விந்தைகள் புரிவதற்கான தூண்டுதலை வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். "உற்சாகமாக இருப்பதுபோல் நடியுங்கள், உற்சாக மடைவீர்கள் தூக்கம் வரவில்லையானால் கட்டிலில் புரண்டு கொண்டிருக்காதீர்கள் எழுந்து சென்று ஏதாவது செய்யுங்கள்." (டேல் கார்னகி) போன்ற சாதனையாளர் களின் கூற்றுக்களைக் கூறி அவர்களை உற்சாகமூட்ட வேண்டும்.

அத்தோடு ஒவ்வொருவரும் தமக்குள் இருக்கும் விந்தையான திறன் களை மக்களும், உலகமும் பயனடையும் வழிகளில் தான் பயன்படுத்த வேண்டும் என்றகட்டாயத்தையும், நாசகார நடவடிக் களின் பக்கம் அவர்களின் கவனம் திரும்பி விடாதபடியும் பயிற்றுவிக்க வேண்டும். உலகம் தேவையாகி நிற்கின்ற ஏராளமான எதிர்பார்ப்புக்களும், படைப்புக்க ளும் நாளை எருவாகவிருக்கும் விந்தை மனிதர்களின் கைகளில்தான் தங்கியுன்னது என்றபடியால் அவர்களில்தான் அதிகம் கவனம் வெலுத்தவேண்டியுள்ளது.

எனவே ஒவ்வொரு மனிதனும் தனக்குள் புதைந்திருக்கும் ரத்தினத் திறன்களை இனம்கண்டு அவற்றை உலகம் பயன்பெறக் கூடிய வகையில் விந்தையான செயற்பாடுகளால் அலங்கரித்து அழிவை நோக்கிச் செல்லும் உலகின் பாதைகளை சீராக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். எதிர்கால சந்ததியினரையும் அவ் வழியிலேயே பயிற்றுவிக்கவும் வேண்டும். அப்போதுதான் உலகம் நாளைய சமுதாயத்திற்கான ஆரோக்கியமான விந்தை மனிதர்களை பெற்றுக் கொள்ளும் என்பது உறுதியாகும்.



**குறிக்கோளினை அடையும் போது தோல்விகள் குறுக்கிட்டால், நீங்கள் அவமானப்பட்டுவிட்டதாக எண்ணாதீர்கள். உங்களிடம் முயன்று பார்க்கும் துணிவு துளிர்விட்டிருப்பதை தெரிந்து கொள்ளுங்கள்.**

**நீங்கள் வெற்றிபெற வேண்டுமாயின் தன்னம்பிக் கையையும், விடாமுயற்சியையும் கைவிடாதீர்கள். நம்பிக்கையும், முயற்சியும் தான் வெற்றிக் கிரீடத்தின் ஒளிமிகு இரு வைரங்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்



வே. கோசலாதேவி
மட்/நாற்பதுவட்டை விவேகானந்தா வித்தியாலயம்,
கொக்கட்டிச்சோலை.
வயது - 16

பாடல் நயத்தல் போட்டி
சிரேஷ்ட பிரிவு
முதலாம் இடம்





கொக்குப் பறக்குது கொக்குப் பறக்குது
கோவிந்தன் வாசலிலே (ஆமாம்)
கோவிந்தன் வாசலிலே .....(2)

எட்டுச் சலங்கையும் கட்டிப்பறக்குது
எங்கட வாசலிலே (ஆமாம்)
எங்கட வாசலிலே......(2)

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டான் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டாய் விற்கச்சொல்லி
கடிதம் போட்டான் வெள்ளைக்காரன் (2)

கவடியடிக்கக் கவடியடிக்கக்
கைகால் முறிய கைகால் முறிய
காலுக்கு மருந்து தேடிக்கட்டு (4)
ஆ...ஆ...ஆ...ஆ....ஆ....

குயினா வெடி வெடி காலுக்கு ரெண்டடி
சோழன் பொரியடி சொக்கட்டான் (4)
ஆ...ஆ...ஆ...ஆ....ஆ...

தந்தனத் தான தனதான தன
தான தந்தனத் தானானா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைக்குள் பூத்த கொடிமல்லிகைப் பூவைக்
கொத்துக் கொத்தாகத் தந்திடுவார்
மிச்சம் பிறகு வருமென்று
முத்தம் ஒன்று தந்திடுவார்
(தந்தனத் தான...)

கண்ணை இமைபோலே காத்திடுவார்
கமுத்திற்கு பலகாரம் தந்திடுவார்
குஞ்சி மயில் போல் வட்டமிட்டு
கொஞ்சிக் குலாவி இருந்திடுவார்
(தந்தனத் தான...)

கட்டிலிலே அவர் படுத்திருப்பார்
தொட்டிலிலே பிள்ளை நித்திரைதான்
பாலும் அடுப்பிலே பொங்கினாலும்
பண்பாக என்னுடன் நடந்திடுவார்
(தந்தனத் தான...)

ஊரும் உறவும் உறங்கிவிடும்
உத்து என்னைப் பார்த்திடுவார்
சத்தியமாக நான் சொல்லுகிறேன்
உத்தமர் அல்லோ என்கணவர்

## சிரேஷ்ட பிரிவு கவிதைப் பாடல் போட்டியில் முதலிடம் பெற்ற வெற்றியாளர் விபரம்

**சிரேஸ்ட பிரிவு - கவிதைப் பாடல்**

செல்வன் . சுந்தரலிங்கம் விதுசன்
வயது - 17
மட்/ மண்டூர் சரஸ்வதி மகாவித்தியாலயம்
மகிளூர்முனை.



- உங்களின் கடந்தகால அனுபவங்கள்தான் உங்கள் வழிகாட்டிகள். அவற்றைப் பின்பற்றி புத்திசாலித்தனமாக, விவேகமாக முன்னேறுங்கள். வாழ்க்கை உங்கள் நண்பன். வரலாறு உங்கள் வழிகாட்டி.
- யாராவது கடுமையான வார்த்தைகள் சொல்கிறவனாக இருந்தால் அவன் மனம் நொந்து போயிருக்கிறான் என்று அர்த்தம். அந்தக் கடும் சொற்களை நீங்கள் ஏற்கவில்லை என்றால் அவை உங்கள் மனதை நோகடிக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறுவர் உரிமைப்பாடல்"



**கணபதிப்பிள்ளை - தணிகாசலம்,**
**வன்னிநகர் திருப்பளுகாமம்,**
**பெரிய போரதீவு,**
**வெல்லாவெளி.**

பாடல் ஆக்கம்
திறந்த பிரிவு
முதலாம் இடம்



**தாளம்:-**

தத்திமித் தித்திமித் தெய் - தருகிட
தாகுட சுந்தரித் தெய்
தத்திமித் தித்திமித் தெய் - தருகிட
தாகுட சுந்தரித் தெய்

**பாடல்:-**

கால்கொலுசு ஓசையிட ஆட்டம்போடடி — எதிர்
காலத்தையே எண்ணி எண்ணி நடனம் ஆடடி
பால் மணக்கும் பிஞ்சுகள் நாம் பாட்டுப்பாடியே -இந்த
நாள் நமது என்று சொல்லி கூத்துமாடடி
( தத்திமித் தித்திமித் தெய் )

சிறுவர்கள் எம் உரிமைகளைக் காத்திடுவீரே - இந்த
தேசத்திற்கே எதிர்காலத் தலைவர் நாங்களே
அறுவடைக்கு அத்திபார வித்துக்கள் நாமே — எங்கள்
அன்புடைய பெரியோரே ஏற்றிடுவீரே-
( தத்திமித் தித்திமித் தெய் )

கல்வி எங்கள் உடல் நிறைய வேண்டும் வேண்டுமே — உங்கள்
கடமை அது பெற்றோரே ஏற்றிடுவீரே
துள்ளித் துள்ளி ஓடி விளையாட வேண்டுமே —நாங்கள்
துன்பச் சுமை தாங்காமல் வாழ வேண்டுமே-
( தத்திமித் தித்திமித் தெய் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருப்பிச்சைக்காரராய் அலையக்கூடாது — நாங்கள்
வீட்டடிமைக் கூலிகளாய் வாழக் கூடாது
கருவினிலே எங்கள் வாழ்வைக் கிள்ளக்கூடாது — உங்கள்
காமவெறி பிஞ்சுகளைக் கொல்லக் கூடாது
( தத்திமித் தித்திமித் தெய் )

பசியாலே நாங்கள் வாடித் துன்புறலாமோ — பெரும்
பட்டினிப்பேய் எமைப் பிடித்துக் கொன்றழிப்பதோ
உறவிழந்த சிறுவர்களை உளம் கொள்ளுங்கள் – இந்த
உலகத்திலே எமதுரிமை காத்து நில்லுங்கள்.
( தத்திமித் தித்திமித் தெய் )

- நீங்களாகவே உங்கள் சுயமரியாதையை விட்டுக் கொடுத்தால் ஒழிய யாரும் உங்களுடைய சுயமரியாதையை உங்களிடமிருந்து பறித்துவிட முடியாது.
- மற்றவர்கள் உங்களை நோக்கி கத்தினால் அவர்களை இரக்கத்துடன் பாருங்கள்.
- அகந்தை சுவரைப்போன்றது. மற்றவர்கள் எறியும் சுடு சொற்கள் அதில் மோதி வலியை ஏற்படுத்தும். அகந்தை இல்லையேல் அந்தச் சொற்கள் புல்லாங்குழலில் நுழைந்த காற்றுப்போல வெளியேறிவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி"



எம்.எஸ்.எம்.ஸப்றாஸ்,
இல 46, பெண்பாடசாலை வீதி,
ஏறாவூர் - 3A
ஏறாவூர்

இலக்கிய விவரணம்
திறந்த பிரிவு
முதலாம் இடம்

வாழ்க்கையால் எழுத்தை அர்த்தப் படுத்திக்கொள்வதும் எழுத்தால் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதும் நேர்மை மிக்க எழுத்தாளர்களினால் முக்கிய பணியாக அமைந்து வந்திருக் கின்றது. திட்டமிடல்களால் உருவாகக் கூடியதன்று இலக்கியச் செயற்பாடுகள். ஓர் எழுத்தாளனுக்குள் இயல்பாகவே அது உருவாகி இருக்கக் கூடியது. வெறும் கனவுகளில் மாத்திரம் மிதக்கின்ற எழுத்து வகைகளுக்கும் வாழ்வைப் படைத்தளிக்கின்ற இலக்கிய த்திற்கும் மிக முக்கி யமான வேறுபாடுகள் இருக் கின்றன. இங்கே எழுத்துப் பணியின் சாரங்களில் ரசனை நுகர்ச்சியாக ஒன்றும் உன்னத மான நீடித்த அனுபவச் சாரம் மற்றொன்றுமாக நம்மிடையே எஞ்சுகின்றன.

அனுபவங்களிலிருந்து தோன்று கின்ற படைப்புக்களே நம்பிக்கை அளிப்பதாக இருகின்றன. பதிவாகவும் பின் வரலாறுகளா கவும் மாறுகின்றன. கால த்தின் சாட்சி யாகவும் தோன்றி நிலைக்கின்றன.



உண்மையினது அசல் பிரதிகள் என்பவையின் உயிர்ப்பான உலகம் காலத்தைச் சுற்றி வருகின்ற மங்காத சூரிய ஒளியாக என்று மிருக்கும். அது பிரிக்க முடியாமல் எம்முட னேயே இறுகிவிடும். எழுத்தாளன் பிரதி பலிப்பாளனாக இருக்கின்றான். வாசகர்களைக் கற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவர்களாக மாற்று கின்றான் அல்லது அதற்கு தூண்டுகின்றான். உணர்வு என்பது அறிவை முந்திக்கொண்டு பீறிடுகின்றது. அறபாத்தின் நோக்கம் மனிதர்களை நோக்கி உயர்ந்துள்ளது. அவருடைய உணர்வுகளே முதலில் முந்திக் கொள்வதை, அவரது கதைகள் காட்டி நிற்கின்றன. என்னைப் பொறுத்தவரை மனிதர்களுடைய அந்தரங்கத்தை, மனச் சாட்சியை பிறாண்டிக் கொண்டிருக்கக் கூடிய கூர்விரல்கள் அவரது எழுத்துக்களுக்கி ருக்கின்றன. அவருக்கு எதைச் சொல்ல வேண்டும் எவ்விதம் சொல்ல வேண்டும் எனத் தெளிவாக தெரிகின்றது. அத்தகைய எழுத்து வடிவங்களின் வெவ்வேறு மாதிரிகள் இத் தொகுப்பில் உள்ளன. அவரது அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் ஆகிய கண்ணோட்டங்கள் தனித்தனியாக, அதனதன் தனித்தன்மைகள் மற்றும் தெளிவுகளோடு அமைந்துள்ளன. அதுவே எழுத்தின் மிகச்சரியான வலுவான தருணம்.

அறபாத்தின் எழுத்துக்கள் அவரை நிறுத்தியிருக்கும் இந்தப் பருவ காலம் மிகுந்த அழகான கார்காலம் என நான் நினைக்கின்றேன். எழுத்துச் செயற்பாட்டின் முக்கியத் தருணங்களை அவர் தவறவிடா மல் அவற்றை முறையாக கையாண்டுமி ருக்கிறார். சக மனிதனையும் அவரது மன அடுக்குகளையும் துல்லியமாகப் பார்க்கத் தெரிந்து வைத்திருக்கின்றார். மனித மனத்தின் அனைத்து விவகாரங்களுக்கும் அதன் கவர்ச்சியான வலயங்களும் அறபாத்தின் எழுத்துக்களில் ஆரவார மில்லாமல் வந்து அமர்ந்துள்ளன. எப்போதும் தனக்கு இசைவான செல்லப்பிராணியைப் போல் கதைகளை அவர் வளர்க்கின்ற பராமரிக்கின்ற பக்குவம், அதன் கலைத் தன்மை பாரட்டத் தகுந்தது.

சமூகத்தின் நிறைவு அதன் திருப்தி என்பது தனிமனித வாழ்வின் அமைதியில் தான் தொடங்குகின்றது. ஒவ்வொரு வாழ்வும் ஒவ்வொரு உலகம் அன்பும், தோல்வியும், வெடிப்பும், விரசலும், ஏமாற்றமும், துரோக மும் சிதைவும் இசைவும் கொண்டதாகவே வாழ்வு இருக்கின்றது.

இங்கு ஓர் எழுத்தாளனின் பணி தீர்வு சொல்வதல்ல, யாருக்கு எதை உணர்த்த முடியுமோ அதை உணர்த்துவது. மேலும் ஒருபடி உயர்ந்து "தீமை எங்கே தொடங்குகின்றது?" என்ற கேள்வியைக் கேட்பது இத்தகைய சில கேள்விகளையும் இவரது எழுத்தின் அரசியல் வெளிப்படுத் தியிருக்கிறது. எந்தவொரு சட்டங்களுக்குள் ளும் நுழைந்து பிதுங்காமல், கிராமத்து ஆற்று நீரோடையைப் போன்று பூக்களும் இலைகளுமான ரம்மியங்களும் கரைகளில் சேர்ந்திருக்கும் அழுகலும் துர்நாற்றங்களும் அருகருகிலேயே இருக்கின்றமை இதன் முக்கியமான அம்சமாகும்.

அறபாத்தின் படைப்புலகைக் கவனித்து வந்த கடந்த காலங்களுக்கும் இனிவரும் காலங்களில் பெறப்பட இருக்கின்ற கவனிப்புக்களுக்கும் அவை கொண்டிருந்த அர்த்தங்களுக்கும் முற்றிலும் வெவ்வேறு அர்த்தங்கள் இருக்க முடியும். இனி வரும் காலங்களில் இதைக் கண்ட டைய வாய்ப்பிருக்கின்றது.

வாழ்வின் திருப்பங்களில் அடிபட்டுப் போகின்றவர்கள் மீதான அக்கறைகளை விட எது முதன்மையாக முடியும் ஒரு படைப்பாளிக்கு? வாழ்வுதானே கதை, கவிதை, கலை எல்லாம் நாம் அனைவரும் ஒரே மாதிரி இருப்பினும் அனைவரும் எப்படி ஒருவராக முடியும்? அந்தக் கேள்விக்கான விடையைத் தேடிச்செல்லும் அறபாத்தின் கதைகளில் அவரைச் சுமந்து செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுவண்டியின் வியர்வையும் மண்ணின் "கரகர" ஒலியும் நமது காதுகளின் ஜன்னல் களைத் தட்டுகின்றன.

சோமாவின் தனிமை துறவிகளின் அந்தப்புரம் என்ற கதைகளின் முடிவுகள்... வேட்டை, மோட்சம், ஜின், தனிமை போன்ற கதைகள் எழுதப்படுவதற்கான பின் புலன்கள். இக்கருப்பொருள் சார்ந்திருக்கும் அக்கறை என்பது கதைகளைவிட உன்னத மான ஒன்று அந்த உன்னதம்தான் அறபாத்தின் மீதான மரியாதையை உயர்த்துவதாக எனக்குத் தோன்றுகிறது. அடுத்து வெளிப்படையான யுத்த கால நெருக்கடிகள் மற்றும் அதனூடான தாம் சார்ந்த சமூக, மனித அவலங்களை அரசியல் தீர்க்கதுடன் எழுதிய கதைகளாவன: தேர்தல் கால குறிப்புகள், ஓணான்கள், திசைகளின் நடுவே, கழுதைகளின் விஜயம், மறுபடியும், ஆண்மரம், அரங்கம் ஆகிய அரசியல் விமர் சன ரீதியிலான கதைகள் இவற்றுக்குச் சரிநிகரானதும் மற்றொரு போர்க்களமான துமானமன உலகை பிரதானப்படுத்துகின்ற சிறு கதைப் பிரதிகளாகச் சாட்சியங்களா கின்றன. அவரது எழுத்தின் அறமும் அறபாத் என்ற மனிதனும் வேறு வேறல்ல என்பதை இவ்விடத்தில் அழுத்திச் சொல்ல முடியும்.

அடுத்ததாக, சிறுகதை முன்னோடி களின் ஆகச் சிறந்த கதைகளுடன் வைத்துப் பார்க்கத் தக்க கதைகள் என நான் கருதும் கதைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தொகுப்பில் முழுமை யான சிறுகதைத் தன்மையைக் கொண்டிருக்கின்ற அக்கதைகள் மூத்தப்பா வின் மாட்டு வண்டி அடுத்தது இரயில்வே ஸ்டேசன். நினைந்தழுதல், மூத்தம்மா ஆகியன ஒரு தேர்ந்த வாசகனை ஆகர்சிக்கும் தன்மைகளைக் கொண்டமைந் தவை இக்கதைகள் நவீன மொழியும் பாரம்பரிய மொழியும் சேர்ந்து ஒன்று கலந்துள்ள நேர்த்தியான கலை உருவம் எனலாம். கலை என்பது மிகப் பெரிய போட்டி சிருஷ்டி என்பதைப் படிப்பவன் மனத்தில் உறையவைக்கும் படைப்புகளா கும் இவை.

வித்தியாசமான புது எழுத்து முயற்சியாக ஏவாளின் தோட்டத்தில் கனிகள் மிச்சமிருக்கின்றன. கனவுத் தன்மை நிறைந்த கவிதை மொழியுடனான கதை கூறல், வாசிப்பனுபவத்தை மணமாக் குகின்றன கதை இது. பின்பொரு நாளில், அவர் திரும்பிப்பார்க்கும் ஆழ்ந்து மூச்சுவிடக்கூடிய அனேகக் கதைகளை தந்திருக்கின்ற ஒரு நிறைவே இப்போதைய அவரது வெற்றியுமாகும்.

முன்முடிவுகளற்றுப் பாத்திரங் களைக் கையாண்டுள்ளமை, பெண்களை "அவள் களாக" உலவவிட்டமை, இவராகச் சலுகை களையோ கட்டளைகளையோ தராத எழுத்து நேர்மை சிறுகதைகளுக்கு வலுவூட்டியுள்ளன.

இலங்கையின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் நிராகரிக்க முடியாத காலத்தின் பதிவுகளாக இக் கதைகள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. வாழ்வின் உள் முகங்களைக் காட்டும் ஒவ்வொரு உடைந்த கண்ணாடிகளிலும் மறைந்திருக்கும் குருவி அச்ச மூட்டக்கூடியது, வன்மம் மிக்கது, அழகின் மாயம் காட்டுவது உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் கலை கற்றல் மாந்திரிகச் செயல் முறைகள்



மூ.அருளம்பலம்
துளசி வாசம்,
ஆரையம்பதி.

நாட்டார் கலை கற்றல்
திறந்த பிரிவு
முதலாம் இடம்

மாந்திரிகத்தில் மந்திரம் என்பது முதன்மை இடத்தைப் பிடிக்கின்றது. மந்திரம் என்பது நினைப்பவரை காப்பது என்பது பொருளாகும். இது குறைந்த சொல்லில் நிறைந்த பயன் தரும் ஒன்றாகும். மந்திரம் மறைத்து சொல்லப்படும் ஆற்றல் வாய்ந்த சொற்களின் கோப்பினை பல தடவைகள் உருப்படுத்தல் மூலம் மந்திர வாதிகள் தாம் நினைக்கின்றவற்றை சாதிக்க முடியும். இந்து சமயநூல் வேதங்களில் இறுதி வேதமாகிய அதர்வண வேதம் முற்று முழுவதாக மந்திரங்களையும்



அவற்றின் பயன்பாட்டு கிரியைகளையும் மூலப்பொருளாகவும், முழுப் பொருளாகவும் கொண்டது என்பது மிகத் தெளிவாகும். ஆலயக் கிரியைகள் யாவற்றிலும் மந்திரங்கள் முக்கியமாக பயன்படுத்தப் படுகின்றது. இந்துக்களின் வாழ்வியலோடு சம்பந்தமான சகல கிரியைகளிலும் இவற்றின் பயன்பாடு மேலோங்கி நிற்கின்றது. இம்மந்திரங்கள் தெய்வங்களுக்குரியனவாகவும், உயிரினங்களுக் குரியனவாகவும், சடப் பொருள்களுக்கு உரியவனவாகவும் மூன்று பெரும் பிரிகளுக்குள் அடங்குகின்றன.

தெய்வங்களுக் குரியனவற்றில் கண்ணகை அம்பாள், பேச்சியம்பாள், மாரியம்பாள், காளியம்பாள், வைரவர், வீரபத்திரர், பெரியதம்பிரான், பரமநயினார், வதனமார் போன்ற தெய்வங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ததி முறையிலான கிரியைகளையும், தமிழ் மந்திரங்களையும் பயன்படுத்துவர். வேறு உயிரினங்களுக்குச் செய்யும் மந்திரங்களில் சுழுக்கு பார்த்தல், பாம்புஓட்டுதல், பாம்புக்கடிக்கு விஷமேறாது தடைபோடுதல், பாம்பின் பெயர்களை அறிதல், விஷப்பாம்புகளை எவை, எவை என அறிதல், அருக்கன் நிற்கும் நிலைய றிதல், தூதன் குறி சொல்லுதல், தவணை போடுதல், விஷக்கல் கொடுத்தல், குழைய டித்தல் போன்றவைகள் அடங்கும். சடப் பொருள்களுக்கான மந்திரத்தில் மந்திர வாதிகளின் மந்திரவித்தாண்மைத் திறன்களைக் காட்டவும், வேடிக்கைகளுக் குமாகவே செய்யப்படுவன. இவை மத்தளம் உடைத்தல், பாயில் ஓட்டவைத்தல், சால்வையை குடையாகப் பிடித்தல், கற்களை கற்கண்டாக்குதல், மணலைச் சீனியாக்குதல், சோறு வேகாமல் தடுத்தல் போன்ற பல வினோத செயற்பாடுகளைச் செய்வதைக் குறிக்கும்.

இவற்றுள் எமது பிரதேசத்தில் பயின்றுவரும் வேறு உயிரினங்களுக்குச் செய்யும் பின்வரும் மந்திரங்களின் விபரங்களைஅறிவோம்.

## 1. சுழுக்குப் பார்த்தல்

மனிதஅவயங்களான கை, கால், கழுத்து போன்றவற்றில் சுழுக்கு ஏற்பட்டால் மந்திரவாதி அட்சரம் வரைந்து பின்வரும் மந்திரத்தை உச்சரித்து சுழுக்கிய கை, கால்களை அச்சக்தியினால் தம்பக்கம் இழுத்து குணப்படுத்துவார்.

"ஓம் ஏகாந்ததிரிதிரி ஏகாந்தம் திரிதிரி
பூ மிதிரி பூ மாதேவிதிரி சூடுதிரி சுடுகாடுதிரி
கும்பமுள்ள குடத்திலிருக்கும் தண்ணீர் உருள
உழுக்கு உருள சுழுக்கத்திழுத்துக்

கொண்டோடிவா
ஓம் காளி கருங்காளி கருங்காட்டின் மேலிருக்கும்
செந்தள மூக்கி சாளசானகி செந்திளையாள் ஓடிவா
ஓம் அப்பு நிற்க தேயுநிற்க வாயுநிற்க
ஊடல் நிற்க உயிர் நிற்க எச்சுழுக்கு பாய்ந்தாலும்
எதிர் சுழுக்கு பாய்ந்தாலும் பத்தச் சுழுக்கும்
பறந்தோடிப் போகவேசிவாகா"

இம் மந்திரத்தைச் சொல்லி வேப்பங் குழையால் மேலிருந்து கீழாக இழுத்து இறக்கிவிடுவதால் பயன் கிடைக்கிறது.

## 2. பாம்புகளை ஓட்ட

"ஓடும் நீர் எரிய நிலம் எரிய
நிலத்தில் வாழும் பாம் பெரிய
ஆலம் எரிய சுடுகாடெரிய
ஓடுஓடுவேகமாக"

என்ற மந்திரத்தை உச்சரித்து மண்ணை ஓதியெறிய அவைகள் ஓடி ஒளிந்து விடும்.

## 3. விஷமேறாமல் தடைபோடுதல்

"ஓம் ஓங்கார ஆங்கார விஷத்தை
ஆதி அரனார் திருமுடியில் ஏறாமல் கட்டினேன்
என்கட்டு தனக்கட்டு என் குருநாதனே
சயிந்தவன் கட்டாய் நிற்க நிற்கவே சிவாகா"

எனும் மந்திரத்தைக் கூறிப் பாம்பு கடித்த இடத்திற்கு மேலாக சுண்ணாம்பு அல்லது நூல் என்பவற்றால் தடை போடுவ தால் விஷம் மேற்பகுதிக்கு ஏறாமல் தடுக்கப்படுகின்றது.

## 4. விஷயந்துக்களான பாம்பு, பூரான், தேள்களின் விஷத்தை இறக்குதல்

"ஓம் திருப்பாற்கடலில் தாலியாகவும்
மகாமேரு மத்தாகவும் மானாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிறாகவும் முப்பத்து முக்கோடி தேவர்கள் புடைசூழ
ஆதி குறமாதர்கள் கடைந்த அமிர்தம்
ஆலகால விஷமத்தமிர்தமாகி
ஓம் ஆம் அமிர்சத்தாண்டு கடைந்தஅமிர்தம்
ஆங்கே நில்லாது இங்கே ஓடிவா"

என்று மந்தரித்து வேப்பங்குழையால் மேலிருந்து கீழாக இழுத்து விட்டால் விஷம் இறங்கி விடும்.

## 5. விஷப் பாம்புகளை அறிதல்

பின்வரும் பாடலில் கூறப்பட்ட உருவ, குண இயல்புகளைக் கொண்டு எவை விஷப் பாம்புகள் எவை விஷமற்ற பாம்புகள் என மந்திரவாதிகள் அறிந்து கூறுவர்.

"தானென்ற பத்மனுடன் அட்ட நாகம்
சலவிரியனிரத்த விரியனவன் குட்டை
மானென்ற குறுவிரியன் பெருவிரியனோடு
மவர் தருகத் திருவிரியன் புல்விரியன் ஆறும்
பானென்ற புடையனொடு காபானோலை
வானென்ற தொம்பேறு மூக்கன் சாரை
வழமை கருவழலை சாணுக மூக்கன்
பாம்பு மயக் காமுறுக்கு மணியனுமே"

எனக் கூறப்படுகின்றது.

## 6.அருக்கன் நிற்கும் நிலையறிதல்

அருக்கன் நிற்கும் நிலையைப் பக்கமாக எண்ணிக் கணக்கிட வேண்டும். இது ஒவ்வொரு நாளும் வெவ்வேறு திசைகளில் நிற்கும் என்பார்கள் வைத்தியர்கள்.

"காரி சனி பகல் அருக்கன் கிழக்காகும்
கங்கலுக்குக் கதிரோன் தெற்கு
சீறிய அருக்கன் நீரே தென்மேற்கு
செவ்வாய்க்கு மேற்கே நிற்கும்
பூ ரியதோர் புந்தி புதன் வடமேற்கு
புகழ்ந்து வரும் பொன்னவர்க்கு வடக்கே நிற்கும்
நாரிகேர் பொன் கடிமை எட்டுங்காட்டி
நயந்த வெள்ளி ஏக்கே வடகிழக்கு" எனும்

பாடலின் மூலம் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் அருக்கன் நிற்கும் நிலையை அறிய முடியும்.

## 7. தூதன் குறி சொல்லுதல்

தூதன் குறி சொல்லுதல் என்பதனை அவதானிக்கும் போது ஒருவருக்குப் பாம்பு கடித்த பிற்பாடு வைத்தியரிடம் சென்று, பாம்பு கடித்தவரின் பெயரைக் கூறி பூச்சி குத்தி விட்டது என்ற வாக்கியத்தை மட்டுமே கூறி அவர் அப்படியே நிற்க வந்த தூதுவன் நிற்கும் நிலையையும் அவனுடைய செயற்பாட்டையும் வைத்துக் கொண்டு என்ன பாம்பு கடித்தது என்று வைத்தியர் கண்டு பிடிப்பார். தூதன் குறிபற்றிப் பல பாடல்கள் உண்டு. அவற்றில் ஒன்று,

"வாறாய் நின்ற தூதன் வந்து கைமடக்கு
ஓர்விரல் நீட்டு என்றான் நாகமாகி சிறுவிரலால்
நாகமண்டலி ஆழி விரல் வேகமில்லை
நடு விரலால் விளங்கிப் பாரு பெரியோரே"

என்று இப்பாடல் விளக்குகின்றது.

## 8. விஷக்கல் கொடுத்தல்

விஷக்கல் கொடுத்தல் எனும் போது பாம்பு கடித்தவரின் கடிவாயை வெட்டி, தேங்காய்ப் பாலால் கழுவி அக்கல்லை கடிவாயின் மேல் வைக்கும் போது அது விஷத்தை எடுக்கும். விஷக்கல்லை வைத்து பல மந்திரங்களை ஓதி விஷத்தைப் போக்குவர். அவற்றுள் ஒரு பாடல்,

"ஒரு விரல் கீரி இருவிரல் செண்பகம்
மூவிரல் பன்றி நால் விரல் மயில்
ஐவிரல் கௌவு கௌவ்வு வாங்குவாங்கு
இரத்த வைரவதானே இவர் விரலில் கட்டிய
விஷத்தை எல்லாம் இந்தா இருந்து
வாங்கப்பா வாங்கு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. குழையடித்தல்

வேப்பங் கொத்தினை எடுத்து மந்திரம் சொல்லி பாம்பு தீண்டியவர் மேல் அடித்தல் குழையடித்தல் எனப்படும். இதன் போது கூறப்படும் மந்திரங்களில் ஒன்று,

**"ஓம் குருவாழ்க குருநாதன் வாழ்க எந்தன் ஆசாரியான் வாழ்க எவ்வானை மறக்கினும் குருவானை மறவேன் குருந்தொட்ட செருப்பும் பல்லிக் குடையும் பாலாடையும் அறியேன் தலைமேல் கொண்டேன் இந்திர தேவர்களும் சந்திர சூரியர்களும் தொட்டெடுத்து தந்த குழை கொண்டு வீசுகிறேன் விஷகலை நெறிமுறி அமிர்தகலை அமிர்தமாக இறங்கவே சுவாகா"**


என்ற மந்திரத்தை கூறுவர்.

## 10. பாம்புகளின் பெயர்களை அறிதல்

பாம்பினங்களின் பெயர்கள் பற்றி பின்வரும் பாடல் மூலம் அறிய முடியும்.

**"ஆருடந் தனையற் றற்தாசை கொண்ட**
**அகத்தியனே சித்தரில் நீ மதிகனப்பா**
**ஒருடந் சொல்லுகின்றேன் எனக்கெங்கோமான்**
**உரைத்ததிது மறைநந்தி யொருவனன்றிப்**
**பாருடாளறிந்து உனக்குச் சொல்வேன்**
**பத்திரம் பாம்பினங்களிலே யனந்தன் தக்கன்**
**சீருருங் குளிகன் வாசுகிமா பதுமன்**
**சிறந்த சங்க பாலனை கார்க்கோடன்றனே"**

இப்பிரதேசத்தில் மந்திரவாதிகளாக விருந்து வைத்தியம் செய்தவர்கள் பலர். அவர்களுள் மிகவும் பிரபல்யம் பெற்றவர்கள் காத்தான் பரிசாரியார், அல்லி சீனியர், கணபதிப்பிள்ளை கந்தப்பர், பரமக்குட்டி கணபதிப்பிள்ளையாவார். தற்போது விஷக்கடி வைத்திய மந்திர மாந்திரிகம் செய்பவர்கள் கந்தப்பர் சீனித்தம்பி, பூசாரியார் பூபாலபிள்ளை மகேந்திரராஜா இருவருமே யாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன் தரித்த காவி உடை



சுப்பிரமணியம் சிவலிங்கம்
விஜயலட்சுமி மில்,
செங்கலடி,
ஏறாவூர்பற்று.

சிறுகதை
திறந்த பிரிவு
முதலாம் இடம்

நாடக விழா நடைபெறுவதற்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. அதற்கிடையில் நாடகத்தில் பங்கு பற்றும் கதாபாத்திரங்கள் வசனங்களை பூரணமாக மனனம் செய்ய வேண்டும் நாடக ஒத்திகை பார்க்க வேண்டும் அவர்களுக்குப் பொருத் தமான உடைகள் மற்றும் அணிகலன் கள் தயாரிக்க வேண்டும். இவை அனைத்தை யும் பத்து நாட்களுக்குள் முடிப்பதற்கு இரவீந்திரன் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தான்.



இரவீந்திரன் ஒரு சிறந்த நாடகக் கலைஞன் பாடசாலைப் பருவத்திலிருந்தே ஓரங்க நாடகங்கள் எழுதுவதிலும், நடிப்பதிலும நெறியாள்கை செய்வதிலும் தடம் பதித்துப் பெரும் புகழ் பெற்றிருந்தான். தனது பாடசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் " அன்ரனியும் கிளியோப் பற்றாவும்" என்னும் ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகத்தில் அன்ரனியாக நடித்து சபையோரின் பாராட்டைப் பெற்றிருந்தான்.

கனடாவில் இயங்கி வரும் புலம் பெயர் தமிழர்களின் "நக்கீரன் தமிழ்ச் சங்கம்" கொழும்பில் ஒரு நாடக விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தது, இதை அறிந்த இரவீந்நதிரன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். எனவே தன்னுடைய "இளங்கோ நாடக மன்றமும்" அதில் பங்கு பற்றுவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் அவன் செய்யத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு பற்றும் நாடகங்களின் ஆற்றுகை நேரம் 30 நிமிடங்கள் மட்டுமே என்பதால் அதற்கு அமைவாக அசோகச் சக்கரவர்த்தியின் வாழ்க்கையில் நடந்தேறிய ஒரு முக்கிய நிகழ்ச்சியைக் கருவாக வைத்து சிறப்பான முறையில் ஒரு நாடகம் எழதினான். இதில் பங்கு பற்றும் கதாபாத் திரங்கள் அசோகசக்கரவர்த்தி, பௌத்த பிக்கு, வயோதிப தாய், மற்றும் யுத்த வீரன் ஆகிய நான்கு பேர் மட்டுமே.

இந்த நாடகத்தை நெறியாள்கை செய்யும் பொறுப்பும், பௌத்த பிக்குவாக நடிக்கும் பொறுப்பையும் இரவீந்திரனே ஏற்றுக் கொண்டான்.

ஆடை, ஆபரணங்கள் அணிவித்து இறுதி ஒத்திகை பார்ப்பதற்காக நடிகர்க ளையும் உதவியாளர்களையும் ஏனைய பொருட்களையும் ஒரு வானில் ஏற்றிக் கொண்டு கொட்டாஞ்சேனையில் உள்ள "கலைமகள் மண்டபத்திற்கு" அன்று காலை 9 மணியளவில் இரவீந்திரன் செல்லும் பொழுது வழியில் பொது மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று பரபரப்புடன் பேசிக்கொண்டிருந்ததை அவதானித்து மிகவும் கவலை அடைந்தான். ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதாக அவனது உள்மனம் சொல்லியது இருந்தும் 30 – 40 நிமிடங்களில் ஒத்திகை முடிந்துவிடும் ஆகையால் தாமதியாது வீட்டுக்குத் திரும்பி விடலாம் என்ற தெம்புடன் மண்டபத்தை அடைந்தான்.

கதாபாத்திரங்கள் தங்கள் உடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலியவற்றை அணிந்து ஆயத்தம் ஆயின. இரவீந்திரனும் காவி உடையை அணிந்து கொண்டான்.

ஒத்திகை ஆரம்பமானது, முதலா வது காட்சி கலிங்கநாட்டு யுத்தகளம் அசோகச் சக்கரவர்த்தி கலிங்கம் மேல் படையெடுத்து வெற்றிவாகை சூடிய இந்தப் போர்க்களத்தில் ஆயிரக்கணக்கில் வீரர்கள் மடிந்து கிடக்கின்றனர். ஆந்தைகளும் கோட்டான்களும் அலறிக் கொண்டிருக்கின் றன. ஓநாய்களும், ஊர் நாய்களும் ஊளையிட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தகளத்தில் இரத்த ஆறு செம்கம்பளம் விரிக்கிறது. இந்தப் பயங்கர ஒலி அமைப்புக்கள் எல்லாம் ஒலி நாடாவில் ஒலித்துக்கொண்டிக்க ஒரு வயோதிப தாய் கைதடி ஊன்றியபடி, "மகனே! மகனே" எனப்புலம்பிக்கொண்டு மங்கிய ஒளியினிலே தீப்பந்தம் கையில் ஏந்திய வண்ணம் இறந்து கிடக்கும் ஒவ்வொரு வீரனுடைய முகத்தையும் புரட்டிப்பார்த்துக் கொண்டு ஊர்ந்து செல்கிறாள். கடைசியில் தன் மகனின் சடலத்தைக் கண்டு பிடித்து அதை தூக்கி மடியில் வளர்த்தி ஒப்பாரி வைக்கிறாள். அவலக் குரல் ஓயாது கேட்டுக் கொண்டிருக்கிறது. அமைதி இழந்த அசோக மன்னன் யுத்தகளத்தை பார்வையிட வருகிறான். பிணக்குவியல்களை கண்டு என்று இல்லாதவாறு மனம் கலங்குகிறான். அழுது துடித்துக்கொண்டிருக்கும் அத்தாயின் அருகில் சென்று அவளோடு பேச்சுக் கொடுக்கிறான்.

**அசோகன்:-**

ஓநாய்களும் நரிகளும் ஊளையிட்டுக் கொண்டிருக்கும் இந்த யுத்தகளத்தில் புலம்பிக் கொண்டிருக்கும் நீங்கள் யார் தாயே?

**தாய்:-**

நானா?.... இதோ தன் தாய் நாட்டிற்காக நெஞ்சில் வேல் ஏந்தி வீர மரணம் எய்தி என் மடியில் கிடக்கின்றானே ஒரு மாவீரன், அவனைப் பெற்றெடுத்த அபலை நான். சில ஆண்டுகளுக்கு முன் என் கணவரை இழந்தேன். இப்போது எனக்குக் கஞ்சி ஊற்றிக்கொண்டிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மகனையும் இழந்து தவிக்கிறேன். இனி நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்?

**அசோகன்:-**

அழவேண்டாம் தாயே! மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்

**தாய்:-**

(தொடர்கிறாள்) யாரோ மண்ணாசை பிடித்த அசோகனாம் அவன் தான் என் தாய் நாட்டின் மேல் படையெடுத்து ஆயிரக்கணக்கான கலிங்க நாட்டு இளைஞர்களைக் கொன்றுகுவித்து அவர்களின் மண்டை ஓட்டின் மேல் முடிதரித்து கொடி பொறித்து ஆளப் போகிறானாம். அவன் எங்களை அடிமையாக்கலாம் இராணுவத்தைக் கொண்டு அடக்கி ஆளலாம். பொது மக்களின் குற்றச்சாட்டுக்களிலிருந்து பொய் சொல்லித் தப்பிக் கொள்ளலாம. ஆனால் நிச்சயம் ஆண்டவனின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. அவனுடைய குடியும் கோத்திரமும் மண்ணோடு மண்ணாகிப்போய்விடும்.

**அசோகன் :-**

இப்படி சாபம் போடுவது சரியில்லை தாயே

**தாய்:-**

ஒரு கொலைகாரனுக்காகப் பரிந்து பேசும் நீர் யாரப்பா?

**அசோகன் :-**

நான் தான் சக்கரவர்த்தி அசோகன்

**தாய்:-**

ஓ! நீ தானா அந்த கொலைகாரன்? மண்ணாசை பிடித்து எங்கள் நாட்டு வீரர்களை வகை தொகையின்றி கொலை செய்த இரத்த வெறி பிடித்த காட்டேரி நீ தானா? இதோ இங்கே செத்து கிடக்கும் இளம் மொட்டுக்களின் முகத்தை பார். அங்கங்களை இழந்து குற்றுயிரும் குலையுயிருமாய் முனகிக் கொண்டிருக்கும் வீரர்களை பார். தங்கள் தாய் நாட்டைக் காக்க அவர் கள் ஆயுதம் ஏந்தியது பிழையா? அவர்களை கொன்று குவித்து தாய் மண்ணை பறித்தெடுப்பதில் நீ என்ன நன்மையைக் கண்டாய்?

**அசோகன்:-**

தாயே ! என்னைத் திட்டித்தீர்க்க வேண்டாம் நான் எனது பிழைகளை உணர்ந்து கொண்டேன். முற்றாக மாறிவிட்டேன்.நான் இப்போது மறுபிறவி எடுத்துள்ள புது மனிதன். இனி எந்த நாட்டின் மீதும் நான் படையெடுக்க மாட்டேன். உயிர் வதை செய்யமாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் தாயே ! (இந்த வேளையில் காவி உடை தரித்த ஒரு பௌத்த பிக்கு உள்ளே வருகிறார்)

**அசோகன்:-**

(பௌத்த பிக்குவைப் பார்த்து கூப்பிய கரத்துடன்) வாருங்கள் துறவியே !

**பௌத்த பிக்கு :-**

அசோக மன்னா! இந்த நடுநிசி வேளையில் மங்கி நிலவொளியில் உங்கள் இருவரின் சம்பாஷனை காற்றில் மிதந்து வந்து என் காதுகளை எட்டியது. அதனால் தான் நான் இங்கு வந்தேன். இந்த யுத்த களத்தில் ஆயிரகணக்கில் வீரர்கள் இறந்து கிடக்கும் செய்தியை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். வடக்கே ஆப்கானிஸ்தானிலிருந்து தெற்கே மைசூர் வரை உன் மௌரிய பேரரசு பரந்து விரிந்து கிடக்கிறது. இப்போது ஆயிர கணக்கில் உயிர்களை கொன்று குவித்து கலிங்கத்தையும் கைப்பற்றி தமிழ் நாட்டின் தலைவாசலில் வந்து படை குவித்து நிற்கின்றாய். நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற உன் மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரன் சூசிமனையே கொலை செய்து ஆட்சி பீடம் ஏறியவன். நீஉன் அதிகார வெறிக்கு மனித குலம் கொடுத்த விலை தான் என்ன? கணவனை இழந்த விதவைகளும், மகனை இழந்த தாய்மார்களும், அண்ணனை இழந்த தங்கைகளும், காதலனை இழந்த கன்னிகளும் எத்தனை ஆயிரத்தினர்? அங்கங்கள் இழந்து கூன், குருடு, செவிடானோர் எத்தனை பேர்?......

**அசோகன் :-**

நான் செய்தது தவறு தான். என்னை மன்னித்து விடுங்கள் பெரும் துறவியே.

**புத்தபிக்கு :-**

மன்னிப்பது பெரிது அல்ல ஆனால் நீ மனமாற வேண்டும். உன் நெஞ்சிலே அன்பு சுரக்க வேண்டும். ஒருவன் யுத்தத்தில் அடையும் வெற்றி நிரந்தரமானது அல்ல. ஆனால் யுத்தத்தில் நிரந்தரமாக தோற்பது மனிதகுலமே என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். புத்த பெருமான் அரச வம்சத்தில் பிறந்தவர். ஆனால் அவர் மண்ணாசை பிடித்து அலைய வில்லை. மனிதம் மேல் அன்பு கொண்ட புனிதர் அவர். அவர் அரசியல் சாக்கடையை மீறினார். ஆன்மிக பூக் கடையை திறந்தார். இதனால் மக்களின் இதயங்களில் குடிபுகுந்தார். பௌத்தம் போதிக்கும் பஞ்ச சீலங்களில் முதன்மை யானது கொல்லாமை இதை நீ நெஞ்சில் நிறுத்து. அகிம்சையை கடைபிடி சகல உயிர்களிடத்திலும் அன்பைக் காட்டு அப்போது தான் உலகம் உன்னை திரும்பி பார்க்கும்.

**அசோகன்:-**

பெருந்துறவியே! தங்கள் போதனையை நான் மனதார வரவேற்கிறேன். இவ்வளவு காலமும் நான் மிருகமாக இருந்தேன். இப்போது மனிதனாக மாறிவிட்டேன். நானும் எனது நாட்டு மக்களும் இன்றிருந்தே பௌத்தத்தை தழுவுகிறோம். இலங்கை, எகிப்து, கம்போடிய முதலிய நாடுகளுக்கு எனது அரச தூதுவர்களை அனுப்பி பௌத்த மதத்தைப் பரப்ப நடவடிக்கை எடுப்பேன். இன மத பேதம் பாராது அன்பினால் அனைவரையும் ஆளப்போகிறேன். இது தான் எனது எதிர்கால இலட்சியம் துறவியே!

**புத்த பிக்கு :-**

நன்றி அசோக மன்னா! தங்கள் இலட்சியம் நிறைவேற எனது வாழ்த்துக்கள்.

புத்தம் சரணங்கச்சாமி, சங்கம் சரணங்கச்சாமி, தர்மம் சரணங்கச்சாமி.

நாடக ஒத்திகை இனிதே முடிவடைந்தது. அதே நேரத்தில் வெறி பிடித்த ஒரு காடையர் கூட்டம் தமிழருக்கு எதிராக கோஷமிட்டு கொண்டு வெளியே வீதி வலம் வந்து கொண்டிருந்தது. ஏதோ காரணத்துக்காக இனக்கலவரம் தொடங்கிவிட்டதை இரவீந்திரன் அறிந்து கொண்டான். இப்போது அவன் செய்ய வேண்டியது தனது உயிரை பணயம் வைத்தால். தன்னை நம்பி வந்த ஏனைய நடிகர்களையும், ரசிகர் கூட்டத்தினரையும் பாதுகாக்க வேண்டியதே!

உடனே இரவீந்திரன் பௌத்த பிக்கு வேஷத்தில் இருப்பதையும் மறந்த நிலையில் வீதியை எட்டி பார்த்தான். காடையர் கூட்டம் கையில் பயங்கர ஆயுதங்களுடன் இரவீந்திரனை நோக்கி வந்து கொண்டிருந்தது. பிக்கு வேடத்தில் இருந்த படியாலும் சிங்களம் நன்கு தெரிந்த படியாலும் இரவீந்தின் பயப்படவில்லை. அந்த கூட்டத்தில் ஒருவன் ஆவேசத்தடன், “ஆமதுருவே! அதுவே தெமிள கட்டிய இன்னவாத” (உள்ளே தமிழர்கள் இருக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்களா? ஆமதுருவே) என இரவீந்தினிடம் கேட்டான்.

"ஓவ்,சமர மினிச இன்னவா ஏ கட்டிய மமாய் மகே யாளுவாய் வலங்கி னேன்" (ஆம் உள்ளே சிலர் உள்ளனர். அவர்களை நானும் எனது நண்பர்களும் கவனித்துக் கொள்கிறோம்) என்றான்.

ஒரு கண்டத்திலிருந்து இரவீந்திர னும் ஏனையோரும் தப்பிக் கொண்டார்கள். அடுத்து என்ன செய்வது என்று இரவீந்திரன் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஓர் இராணுவ வாகனம் அந்த வீதியால் வந்து கொண்டிருந்தது. பிக்கு உடையில் இருந்த இரவீந்திரன் கையைக் காட்டி வாகனத்தை மறித்தான். வாகனம் நின்றது.

"அத்துலே சமாரு தெமிள கட்டிய இன்னவா ஏ கட்டிய கருணாகர அனார்த்த கந்தோர்லா கீன் தாண்டப் புளுவன்த? (உள்ளே சில தமிழர்கள் இருக்கிறார்கள் அவர்களைத் தயவு செய்து அகதிமுகாமில் கொண்டு விடமுடியுமா?) என இரவீந்தின் இராணுவத்தினரிடம் கேட்டான். அவர்கள் சம்மதித்தனர் எனவே அனைவரையும் கூப் பிட்டு அவசரமாக வாகனத்தில் ஏற்றிவிட்டு இரவீந்தினும் ஏறுவதற்குப் போனான்

அதற்கு இராணுவத்தினர்,"ஓயா அவிலா கரதர வெண்ட எப்பா ஆமதுருவே அப்பி பரிசம் கீன் தன்னவா" (நீங்கள் வந்து கரச்சல் படவேண்டாம் ஆமதுருவே நாங்கள் பாதுகாப்பாக கொண்டு விடுகிறோம்) என்று இரவீந்திரனிடம் கூறினர். இரவீந்திரன் அதிர்ச்சி அடைந்தான் மற்றவர்களை காப்பாற்றப் போய் தான் மாட்டிக் கொண்டதை இட்டு கவலை அடைந்தான். இருந்தும் காவி உடை அவனுக்கு கொஞ்சம் தெம்பைக் கொடுத்தது.

பல இடங்களில் கொழும்பு எரிந்து கொண்டிருந்தது. வெடிச்சத்தமும் தமிழரின் அவலக் குரலும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தன. கொள்ளை அடித்த பொருட்கள் வாகனங்களில் கடத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

அந்த நேரம் அதே வீதியில் மேலும் ஒரு காடையர் கூட்டம் வந்தது. "பிக்கு" இரவீந்திரனைக் கண்டதும் அனைவரும் தங்களோடு சேரும் படி கேட்டது. உயிர் தப்ப வேண்டுமெனில் இரவீந்திரனுக்கு இதை விட வேறு வழியில்லை. "பாம்பு தின்னும் ஊருக்கு போனால் நடுத்துண்டு நமக்கு" என்பதற்கேற்ப இரவீந்திரனும் அவர்களோடு இணைந்து காடைத்தனத்தில் இறங்கினான். வீடுகளுக்குக் கல்லெறிந் தான். தமிழர்களை வீதியில் கண்டால் காடையர்களோடு சேர்ந்து அடிப்பதைப் போல் நடித்தான். வீடுகளை கொள்ளை அடித்தான்.

எப்படி இருந்தும் இரவீந்திரனுக்கு உள்ளுக்குள் ஒரு பயம் இருக்கத்தான் செய்தது. தனது வேஷம் கலைந்தால் தன் உயிருக்கே ஆபத்து என்பதை அவன் அறியாமல் இல்லை. ஆகவே எப்படியாவது அந்தக் காடையர் கூட்டத்திலிருந்து தப்பிக் கொள்ள வேண்டும் என தீர்மானித்தான்.

நல்ல வேளையாக இரவீந்திரன் மட்டும் தான் வேலை பார்ப்பதற்காக கொழும்பு வந்தான். அவனுடைய மனை வியும், மகனும் மட்டக்களப்பில் இருந்தார் கள். எனவே எந்தக் கோலத்திலாவது மட்டக்களப்புக்கு போய் சேர்ந்து விட வேண்டும் என சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் இரவீந்திரன்.

நல்ல வேளையாக பொலநறுவைக்கு போவதற்கு அந்த வீதியால் ஒரு தனியார் பேருந்து வந்து கொண்டிருந்தது. அதை மறித்து இரவீந்திரன் ஏறிக்கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் வழியில் நித்தம்புவவில் வைத்து வாகனத்தை மறித்து ஒரு கும்பல், "அதுவே தெமிள கட்டிய இன்னவாத" எனக் கேட்டு ஒவ்வொரு பிரயாணியையும் சோதனை செய்தனர். இரவீந்திரனை மட்டும் சோதனை செய்யவில்லை துப்பாக்கிய வசமாக உள்ளே இருந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் மாட்டிக் கொண்டனர். இரவீந்திரன் அவர்களுக்காக எவ்வளவோ வாதாடியும் பிரயோசனம் இல்லாமல் போய் விட்டது. காணாமல் போனோர் பட்டியலில் அவர்களும் சேர்க்கப் பட்டனர். போகும் வழி நெடுகிலும் இப்படி இனம் தெரியாத கும்பல்களால் வாகனம் நிறுத்தப்பட்டு சோதனை இடப்பட்ட பின்பே பிரயாணத்தை தொடர அனுமதி கொடுக்கப்பட்டது.

ஒருவாறாக அதிகாலை 3மணியள வில் பேருந்து பொலநறுவையை அடைந்தது. இரவீந்தினுக்கு பசி தாங்க முடியவில்லை. இருந்தும் பிக்கு வேடத்தில் இருந்த படியால் கடையில் அவன் சாப்பிட விரும்பவில்லை.

இரவீந்திரன் இப்போது எதிர் நோக்கும் அடுத்த பிரச்சினை பொலநறுவை யிலிருந்து மட்டக்களப்புக்கு எப்படிப் போய் சேருவது என்பது தான். அதுவரை அவனு டைய நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டு தான் இருந்தது. விடிந்தால் ஒரு வேளை பொலநறுவையிலும் இனக்கலவரம் பரவலாகும். ஆகவே பொழுது விடியும் முன் மட்டக்களப்பை அடைந்திடவேண்டும் என இறைவனை வேண்டினான்.

வெகு நேரத்துக்கு பின் கொழும்பு திசையிலிருந்து வந்த ஒரு லொறி இரவீந்திர னுக்கு அருகில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சாரதி இரவீந்திரனை உற்றுப் பார்த்து விட்டு சாப்பாட்டுக் கடைக்குள் தன் உதவியாளருடன் சென்றான். சாப்பிட்டு வந்ததும் இரவீந்திரனை பார்த்து "ஆமதுருவே,மட்டக்களப்புவ யனவாத?" என சாரதி கேட்டார்.

அளவு கடந்த மகிழ்ச்சி மேலிட் டால். இரவீந்திரனுக்கு உடன் பதில் சொல்லவே வாய் வரவில்லை. ஒருபடியாக தன்னைச் சுதா கரித்துக் கொண்டு "ஒவ் றைவருண்ணே" என மகிழ்ச்சியுடன் பதில் சொன்னான். உடனே இரவீந்திரனையும் ஏற்றிக் கொண்டு லொறி மட்டக்களப்பை நோக்கி விரைந்தது. இப்போது அந்த சாரதி வெறும் லொறிச் சாரதியாக இரவீந்திரனுக்கு தெரியவில்லை அபயமளிக்கும் பார்த்த சாரதியாகவே அவர் தோற்றம் அளித்தார். வேஷம் கலைந்து விடுமோ என்ற பயத்தில் இரவீந்திரன் லொறிச் சாரதியோடு அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால் சாரதியோ முதலில் பேச்சுக் கொடுத்தார்.

"ஆமதுருவே! கொழும்பில் இனக்கலவரம் தொடங்கிவிட்டது விடிந்ததும் இலங்கை எங்கும் பரவும் போல் தெரிகின்றது. புத்த பகவானின் காலடிபட்ட இந்த நாட்டில் ஏன் சாதியின் பெயரால் மக்கள் அடிபட்டுக் கொண்டு இருக்கி றார்களோ தெரியாது", எனும் கருத்துப்பட மிகவும் கவலையுடன் சாரதி சிங்களத்தில் பேசினார். அதற்கு இரவீந்திரனும் சிங்களத்திலே தன் கருத்தை கூறினார்.

"நீங்கள் சொல்வது உண்மை தான்...... ஒருமுறை பசியால் வாடிக் கொண்டிருந்த சித்தார்த்தர் ஓர் இடைச் சிறுவனிடம் குடிப்பதற்கு பால் தரும் படி கேட்டார். அதற்கு அச் சிறுவன் தான் தாழ்ந்த சாதி என்பதால் அவருக்கு பால் தருவது தப்பு என வருத்தத்துடன் கூறினார்.அதற்குச் சித்தார்த்தர் சகல மனிதர்களின் இரத்தத் தின் சிவப்புத் தான் என்றும் அதன் சுவை உவர்ப் புத் தான் என்றும், ஆகவே உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என யாருமில்லை உலகில் என்று சிறுவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றினார்'' என்றான்.

“நீங்கள் உண்மையில் புத்த பிக்குவாகப் போதனை செய்வதற்கு மிகவும் பொருத்தமானவர் தான் இரவீந்திரன் ஐயா'', என சாரதி தமிழில் கூறியதும் இரவீந்திரன் திடுக்கிட்டான்.

லொறி அப்போது தான் வெலிகந்தையைத் தாண்டிக் கொண்டி ருந்தது. தமிழ் பிரதேசத்தை அடையும் முன்பே தனது வேஷம் கலைந்து விட்டதே என எண்ணி இரவீந்திரன் பயந்தான்.

சாரதி தமிழில் தனது பேச்சை தொடர்ந்தார் “இரவீந்திரன் ஐயா! நீங்கள் என்னை மறந்துவிட்டீர்கள், ஆனால் நான் உங்களை மறக்கவில்லை. எனது பெயர் பியசேன சில வருடங்களுக்கு முன் சிங்களவர்கள் மட்டக்களப்பிலிருந்து எல்,ரி,ரியினால் விரட்டி அடிக்கப்பட்ட போது முன் பின் தெரியாத நிலையிலும் எனக்கு அடைக்கலம் தந்து என்னைக் காப்பாற்றினீர்கள். இதனால் தங்கள் உருவம் எனது இதயத்தில் சிக்கெனப் பதிந்துள்ளது. அதனால் தான் எனது முதல் பார்வையிலே பொலநறுவையில் வைத்தே தங்களை இனம் கண்டு கொண்டேன். நீங்கள் இனி மேல் பயப்படத் தேவையில்லை தாங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளலாம்'' என்றார் சிரித்தவாறே.

மறுபிறவி எடுத்த இரவீந்திரன் பிக்குவின் உடைகளை களைந்து இரவீந்திரனாக மாறி மட்டு நகருக்குள் நுழையும் போது, மட்டு நகர் வாவிக்கரையில் அமைந்து கம்பிரமாக காட்சி தரும் கொத்து குளத்து மாரியம்மன் ஆலய மணி யோசை காலை இளந் தென்றலில் மிதந்து வந்து நேரம் ஆறு மணி ஆகிவிட்டது என்பதை அறிவித்தது.

**(யாவும் கற்பனை)**

- **திறமை கொண்ட மனிதனுக்கு தோல்விகள் தொடரலாம். வெற்றிகள் தாமதமாகலாம் ஆனால் வெற்றி கிடைப்பது உறுதி.**
- **எண்ணங்களுக்கு இடையில் உள்ள இடைவெளிகளைப் பாருங்கள். அந்த இடைவெளிகளுக்குள் மகத்தான சக்தி மறைந்திருக்கிறது. அந்த இடைவெளியை சிறப்பாகப் பாவித்தால் அடுத்து வரும் எண்ணங்களை நல்லபடியாக மாற்றலாம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை அந்தாதி



எதிர்மனசிங்கம் ஜெயரஞ்சித்
231/A வாணி வித்தியால ஒழுங்கை
கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

**கவிதைப் போட்டி**
**திறந்த பிரிவு**
**முதலாம் இடம்**

அன்புள்ளம் கொண்ட அம்மாவுக்கு
மகள் எழுதும் கடிதம்

ஏதோ நானும் இருக்கிறேன்.
உருப்படியாய்ப் படிக்கிறேன்.
யாருமில்லை நமக்கு – நீ
எப்படி இருப்.... நினைக்கிறேன்.

பள்ளிக்கூடம் சேக்கனன்னு
பாத்திரத்த வித்திங்களே–எந்தப்
பானையில் சமைக்கிறேனு எழுதுங்க–நீங்க.
எந்தப் பானையில் சமைக்கிறேனு எழுதுங்க.

புத்தக நோட்டு வாங்கப் பணம்
அனுப்புறேனு சொன்னிங்களே
பாத்திரம்தேய்ச்ச வீட்டில – இன்னும்
பணம் கொடுக்கலெயே அம்மா

பாத்திரம் தேய்ச்ச வீட்டில
இன்னும் பணம் கொடுக்கலேயா
புத்தக நோட்டு வாங்கலனு
வாத்தியார் தினமும் அடிக்கிறார்

வாங்கிக் கொடுத்த பேனா உடைந்து
இரவல் வாங்கி எழுதுகிறேன்
கிழிந்த சட்டக் காரியன்னு
கிண்டலாத்தான் பேசுறாங்க –ஏம்

மனசு தாங்காமல் நான் அழுகிறேன்
ஹாஜியார் நாநா வீட்டுள்ள
பழைய சட்டை தருவதா சொன்னீங்களே–
வரும்
போது மறக்காம வாங்கி வாங்கம்மா

விடுதி சோறு புழுதியெனு
வீதியில கொட்டுறாங்க
நான் மட்டும் தம்பிக்கு
ஊட்டுற நினைப்பில் –அழுது

கொண்டே சாப்பிடுகிறேன்
மீராண்ட ஆத்தோரம்
மறந்தும் போகாதம்மா
கருநாகம் கொல்லியிலதான் இருக்குது

மேல் அகண்ட கூரை மேலே
சாக்க கிழித்துப் போடுங்கம்மா
மாரி மழை அடிச்சிச்சின்னா
இருக்குமிடம் நனைஞ்சிடுமே

பாத்திரம் தேய்த்த கையெல்லாம்
காய மென்னு சொன்னாங்க
நெஞ்சு வேதனை எனக்கு–நீ
மஞ்சப் பத்தும் போட்டுக்கம்மா

நெஞ்சு வேதனை எனக்கு–நீ
மஞ்சப் பத்தும் போட்டுக்கம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனுக்குட்டி




திருமதி. சுந்தரமதி வேதநாயகம்
கலைமகள் வீதி நொச்சிமுனை, மட்டக்களப்பு
கி.சே.பிரிவு : நொச்சிமுனை
பி.செ.பி. : மண்முனை வடக்கு

திறந்த பிரிவு
சிறுவர் கதை ஆக்கம்
முதலாம் இடம்

ஒரு மீன் தொட்டிக்குள் நான்கு மீன்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

சில நாட்களாக மிகவும் ஆனந்தமாக காணப்பட்டன. இதற்கு புதிய சிறிய மீன்குஞ்சு ஒன்று தங்களுடன் விளையாட வரப் போகின்றது என்பதே காரணமாகும்.

வீட்டுக்கார அம்மா சாப்பாடு போட்டால் முதலில் மீன் குஞ்சை சுமந்து திரியும் தாய் மீன் உண்ட பின்பே தாங்கள் உண்டன.



ஒரு நாள் தாய் மீன் எதுவும் சாப்பிடாமல் தொட்டியின் அடியில் மரங்களுக்குள் சென்று படுத்துக்கொண்டது.

அப்பா மீனும் மற்றைய மீன்களும் சாப்பிடாமல் தாயாகப் போகும் மீனைச் சுற்றிச்' சுற்றி வந்து கவனித்துக்கொண்டன.

ஆறுதல் வார்த்தை கூறின. தாம் உண்ணும் உணவை கொண்டு வந்து உண்ணுமாறு கெஞ்சின.


மறுநாள் காலை அழகான மீன் குஞ்சு ஒன்று அம்மா மீனின் அருகில் இருப்பதை கண்டு மகிழ்ந்து போயின.

அழகான செல்ல மீன் குஞ்சிற்கு எல்லோரும் சேர்ந்து "மீனுக் குட்டி" என பெயர் வைத்தனர்.

மீனுக்குட்டி படு சுட்டியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றைய மீன்களின் வாலைக் கடித்தல், துரத்தி ஓடுதல், துள்ளித் துள்ளிப் பாய்தல், எல்லோரிடமும் கதை கேட்டு தொந்தரவு செய்வது என ஒரே விளையாட்டும் கும்மாளமும் தான்.

அனுபவங்களைக் கதை கதையாகக் கூறும்.

ஆச்சரியத்துடன் கண்கள் விரிய வாயைத் திறந்தபடி கதைகளைக் கேட்கும்.

ஏன் அம்மா இந்தப் பெட்டிக்குள் மட்டுமே இங்கும் அங்குமாகக் திரும்ப திரும்ப சுற்றி வருகிறோம். வெளியே செல்ல முடியாதா?

வெளியே குதித்துப் பார்த்தால் என்ன? என்றது.

ஐ....ய்..ய்...ய்.... யோ அப்படிச் செய்து விடாதே. நாம் உயிர் வாழ நீர் அவசியம். நிலத்தில் எம்மால் வாழ முடியாது. அப்படியா? என்ன நடக்கும் அம்மா? என் செல்லமே நீ இறந்து விடுவாய்.

சில நாட்களின் பின் வீட்டுக்கார அம்மா மீன் தொட்டியை துப்பரவு செய்வதற்காக எல்லா மீன்களையும் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தினுள் நீர் விட்டுப் பாதுகாப்பாக வைத்தார்.

வீட்டுக்கார அம்மா வெளியே மீன் தொட்டியை துப்பரவு செய்து கொண்டிருக்கும் போது உள்ளே இருந்த மீனுக்குட்டி திடீரென வெளியே துள்ளப் பாய்ந்து விட்டது.

இப்படி மீனுக் குட்டி துள்ளிப் பாயும் என எதிர்பாராத மீன்கள் கவலை கொண்டன.

தங்களால் மீனுக் குட்டியை காப்பாற்ற முடியாதுள்ளதே என நினைத்து அழுதன.

மீனுக்குட்டி நிலத்தில் நீந்த முயற்சித்தது முடியவில்லை மூச்சு எடுப்பது கஸ்ரமாக இருப்பதை உணர்ந்தது. பயம் பிடித்துக் கொண்டது.

அம்மா, அப்பா, அண்ணா, மாமா, என்னைக் காப்பாற்றுங்கள் என அலறியது.

துப்பரவாக்கி முடித்த பின் வேறுநீர் நிரப்பி மீன்களை அதற்குள் விடும் போது பார்த்த வீட்டுக்கார அம்மா மீன்குஞ்சைத் தேடினார் காணவில்லை.

ஓடிச் சென்று மீன்கள் வைத்திருந்த இடத்தில் தேடிய போது அசைவின்றி கீழே கிடந்தது மீன் குஞ்சு. உற்றுப்பார்த்தார். செப்பட்டை மெதுவாக அசைவதைக் கண்டு மீண்டும் தொட்டிக்குள் விட்டார்.


தொட்டிக்குள் மீனுக்குட்டி தலை கீழாய் மிதந்தது. எல்லா மீன்களும் வளைத்து கவலையுடன் சுற்றி வந்தன.

அம்மா மீன் அழத் தொடங்கி விட்டது. சிறிது நேரத்தில் உடலில் அசைவு தெரிந்தது.

கடவுளே மீனுக்குட்டிக்கு ஒன்றும் நடந்துவிடக்கூடாது என எல்லா மீன்களும் பிரார்த்தித்தன.

மெதுவாக கண்ணை அசைத்த மீனுக்குட்டியை தாய் அன்போடு அணைத்துக் கொண்டது. சிறிது நேரத்தில் மெதுவாக நீந்தத் தொடங்கியது மீனுக்குட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவலையுடன் இருந்த அம்மாவிடம் அம்மா என்னை..... மன்னித்துக் கொள்ளுங்கள். இனி உங்கள் சொல்லைக் கேட்டு நடப்பேன் என்றது. மறுநாள் அம்மாவிடம் கேட்டது. காலம் முழுவதும் இங்கே தான் வாழ்கிறீர் களா?

இல்லை மீனுக்குட்டி, ஆழ் கடலில் எமது பெரிய உறவினர் கூட்டத் தோடு வாழ்ந்து வந்தோம். மனிதர்கள் பிடித்து வந்து மீன் வளப்பவர்களிடம் விற்று விட்டார்கள்.

இம்..... அது ஒரு மிகவும் இனிய காலம். அம்மா அம்மா ஆழ்கடலைப் பற்றி கூறுங்களேன் என கெஞ்சியது.

அங்கு என்னென்ன இருக்கும் என்று கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தது. பல்லாயிரக் கணக்கான உயி ரினங்கள் அங்கே தான் வாழ்கின்றன என்றது தாய்.

நாளை மிகுதியைக் கூறுகின்றேன். நிறிது ஓய்வு எடுத்துக் கொள் என்றது. மீனுக்குட்டியோ அப்பா மீனிடம் சென்றது. ஆழ் கடலைப் பற்றி அறியும் விருப்பத்தில் தனக்கு ஆழ் கடலைப் பற்றி கூறுமாறு கெஞ்சியது.

அப்பா மீன் ஆழ்கடலைப் பற்றி கூறத் தொடங்கியது. மீனுக்குட்டி அங்கே பலவகையான பெரிய சிறிய மீன்கள், அழகான தாவரங்கள், முருகைக் கற்கள், நண்டு, இறால், ஆமை, கணவாய், கடற் குதிரை, நட்சத்திர மீன் என இன்னும் பல.....

உண்மையா அப்பா? அவ்வளவு உயிரினங்கள் அங்கு உள்ளதா? என ஆச்சரியத்துடன் கேட்டது. எனக்கு அங்கு போய் பார்க்க ஆசையாய் உள்ளது அப்பா. எப்படிச் செல்வது?

இது நம் கையில் இல்லை. யார் கையில் உள்ளது அப்பா? கடவுளின் கையில். யார் அந்தக் கடவுள், உன்னை என்னை இந்த உலகத்தைப்படைத்தவர்.

நாம் ஆழ்கடலுக்கு போக கடவுள் உதவுவாரா அப்பா?

ஆம்! நீ குழப்படி செய்யாமல் அமைதி யாக இருந்து கடவுளிடம் கேள் ஒவ்வொரு நாளும் கேள் அவர் உதவுவார்.

நம்பியவர்களை கடவுள் கை விடுவதில்லை. கடவுள் எப்படிப்பட்டவர்?

எல்லாம் வல்லவர், எல்லாம் அறிவபர், அன்பே வடிவானவர். அப்பா கூறியபடி கடவுளிடம் ஒவ்வொரு நாளும் கேட்டது. மீனுக்குட்டி ஒரு நாள்.....

மீன் தொட்டிக்கு அருகே நின்ற பிள்ளைகள் வெளிநாட்டிலுள்ள தந்தை யிடம் போகப் போவதாக கதைத்தனர். அம்மாவிடம் மகன் கூறினான் மீன்களை நண்பர்களிடம் கொடுத்து விட்டுச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வோம்.

இல்லை அண்ணா பாவம் இந்த மீன்கள் எம் சந்தோசத்திற்காக வீட்டின் அழகிற்காக வாய்பேசமுடியாத இந்த ஜீவன்களின் சுதந்திரத்தை நாம் ஏன் தடுக்க வேண்டும்?

இவற்றை கடலில் கொண்டு விட்டு விடுவோம். என்றாள் மகள் அம்மாவும் சம்மதித்தார்.

மறுநாள் மகன் எடுத்துச் சென்று கடலில் விட்டு விட்டான்.

மீனுக்குட்டி ஆனந்தத்தில்



துள்ளித் துள்ளி குதித்தது தன் விருப்பம் போல் நீந்தி விளையாடியது.

மீனுக்குட்டி இங்கே வா. தொட்டிக்குள் இருந்தது போல் இங்கே பாதுகாப்பு இல்லை

அதோ பார் பெரிய மீன்கள் சிறிய மீன்களைப் பிடித்து உண்பதற்கு துரத்திச் செல்கின்றன என காட்டியதும் கண்ணால் கண்ட மீனுக்குட்டி பயந்து விட்டது.

ஆழ்கடலை நோக்கி சென்றன. தாயின் அறிவுரைப்படி மீனுக்குட்டி நீந்திச் சென்றது.

அழகு நிறைந்த ஆழ்கடல் ஆபத்தும் நிறைந்தது என தாய் எச்சரித்தது.

ஆழ்கடலின் அழகு அற்புதக் காட்சிகளை கண்ட மீனுக்குட்டி ஆகா!! எவ்வளவு அழகான உலகம், அதைப் படைத்த இறைவனுக்கு நன்றியும் கூறியது.

சில மாதங்களின் பின்...........

மீனுக்குட்டிக்கு பல நண்பர்கள் கிடைத்தனர்

நண்பர்களுக்கு மக்களைப் பற்றியும் மீன் தொட்டியைப் பற்றியும் அனுபவமுள்ள மீனுக்குட்டி கதை கதையாக கூறும். நண்பர்களும் அப்படியா? என ஆர்வமுடன் கேட்டனர்.

இன்று மீனுக்குட்டி அவர்களின் தலைவனாக்கப்பட்டது.

பெற்றோர் சொற்படி நடக்கும் மீனுக்குட்டியாகவும், நண்பர்களுக்கும், சிறிய மீன்களுக்கும் புத்திமதி கூறி வழிநடத்தும் மீனுவாகவும் இன்று மாறிவிட்டது.

அதன் அப்பாவும் அம்மாவும் மீனுக்குட்டி தன் பிள்ளைதான் எனப் பெருமையாக மற்றைய மீன்களிடம் அறிமுகப்படுத்தி மகிழ்ந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**முழுப்பெயர்** : பேராசிரியர் சி.மௌனகுரு
**முகவரி** : 45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை
**பிறந்த திகதி** : 09.06.1943
**திறமையுள்ள துறை** : கூத்து, நாடகம்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் முகவரியாகவும் கொண்ட பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் ஆசிரியராகவும் (1965–1971), பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் பாடநூல் எழுத்தாளராகவும் (1972–1975), பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையளராகவும் (1981–1982), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக (நுண்கலைத்துறை) விரிவுரையாளராகவும் (1983–1991), கிழக்குப் பல்கலைக்கழக கலை – கலாசார பீடாதிபதியாகவும் (1993–1998) பணிபுரிந்தவர். 1991 தொடக்கம் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்று இன்றுவரை கடமையாற்றுகின்றார். சமூகவியல் நோக்கில் ஈழத்து மரபுவழி நாடகங்களை கலாநிதிப் பட்டத்திற்காக முதன்முதலில் ஆய்வுசெய்தவர். இந்த ஆய்வு 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' என்ற தலைப்பில் 1998ல் நூலாக வெளிவந்தது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தயாரிப்புக்களுக்கு மிகுந்த துணையாகவும் இருந்தார். 'சடங்கிலிருந்து நாடகம் வரை' (1985), 'தப்பி வந்த தாடி ஆடு' (நாடகம்– 1987), 'மௌனகுருவின் மூன்று நாடகங்கள் (1987), 'பழையதும் புதியதும்' (1992), 'சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் (1992), 'சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும்' (1993), 'ஈழத்தில் தமிழ் நாடக அரங்கு' (1993), 'கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்' நீலாவணன் (1994), 'சக்தி பிறக்குது' (நாடகம் 1997), 'இராவணேசன்' (நாடகம் 1998) ஈழத்து நாடக மரபும் சரத்சந்திராவும் (1999) என்னும் நூல்களை எழுதியதுடன் பேராசிரியர் சிவத்தம்பியுடன் இணைந்து 'அரங்கு ஓர் அறிமுகம்' எனும் நூலையும் எழுதியுள்ளார். அத்தோடு சுபத்திரன் கவிதை நூலையும் பதிப்பித்துள்ளார். அத்துடன் இவர் 20ம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியம் (1984) என்னும் நூலின் இணையாசிரியருமாவார். இவற்றுள் 'தப்பி வந்த தாடிஆடு' 'பழையதும் புதியதும்', 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு', 'மட்டக்களப்பு' மரபுவழி நாடகங்கள்' ஆகியன சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவை. சிறந்த நடிகரும் நாடகாசிரியரும், தயாரிப்பாளரும் நாட்டுக்கூத்துக் கலைஞரும், சிறந்த ஆய்வாளருமான இவர் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை ஈழத்தின் பல பாகங்களிலும் நடாத்தி அத்துறை வல்லுநர்களை உருவாக்கி வருகின்றார். சிறுவர் நாடகத்துறையில் இவரது பங்களிப்பு கணிசமானது. அண்மைக் காலமாக ஈழத்தில் பாரம்பரிய இசைமரபு குறித்த தேடல்களில் ஈடுபட்டு நாட்டார் இசைபற்றிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். தமிழுக்கான 'இன்னிய அணி' ஒன்றினையும் கி.பல்கலைக்கழகத்தில் உருவாக்கியுள்ளார். அத்துடன் உலக நாடக தின விழாவினைக் கடந்த பல வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடத்திவந்துள்ளார். தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிக்காக இவருக்கு தேசிய ரீதியாக வும், சர்வதேச ரீதியாகவும் விருதுகளும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதேபோன்று மாவட்ட ரீதியாகவும் கௌரவிக்கப்படவுள்ளதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**முழுப்பெயர்** : திரு.கறுவத்தம்பி அழகுப்போடி

**முகவரி** : மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை.

**பிறந்த திகதி** : 1926.08.02

**திறமையுள்ள துறை** : வசந்தன்கூத்து, கொம்புமுறி விளையாட்டு, நாட்டுக்கூத்து, மற்றும் கண்ணகி அம்மன் வழக்குரை ஏட்டை எழுதி படிப்பதற்கு முன்னின்றமை.

திரு.கறுவத்தம்பி அழகுப்போடி அவர்கள் மகிழடித்தீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். பாராட்டுச்சான்றிதழ் (இலங்கை தமிழரசுக்கட்சி 14வது தேசிய மாநாடு 2012)விருது, கிராமிய கலைச்சுடர் (பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் – 2013) ஆகிய விருதுகளைப் பெற்றவர்.

இவர் சிறந்த கிராமியக் கலை வல்லுநரும் கிராம அபிவிருத்தி முதலானவற்றிலும் நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து, கொம்புமுறி விளையாட்டு, கண்ணகி அம்மன் வழக்குரையினை ஏட்டில் எழுதி படித்தல், கும்மி, காவியங்கள், ஆகியவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்.

மற்றும் ஆரம்பக் காலங்களில் ஓலையால் எழுதப்பட்ட குளிர்த்தி ஏடு, வழக்குரை ஏடு ஆகியவற்றை இசையுடன் இனிமையாக பாடுவதில் சிறந்தவர். கொழும்பில் நடைபெற்ற பண்டாரநாயக்காவின் பதவியேற்பு வைபவத்தில் இவரால் பயிற்றுவிக்கப்பட்ட வசந்தன் கூத்து வரவேற்பு நடனமாக ஆடப்பட்டமை இவரது கலைத்திறமையை பறைசாற்றி நிற்கின்றது. இவர் எமது கலைக்கழகத்தின் ஆலோசகராகவும் திகழ்கின்றார். அத்தகையவர் மாவட்ட ரீதியாகவும் கௌரவிக்கப்படவுள்ளதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்கள்

**முழுப்பெயர்** : சந்தியாப்பிள்ளை அரியரத்தினம்
**புனைப்பெயர்** : வாகரைவாணன்
**முகவரி** : "ஆரணி அகம்" நாவற்குடா கிழக்கு, மட்டக்களப்பு.
**பிறந்த திகதி** : 22.12.1941
**திறமையுள்ள துறை** : இலக்கியம், ஆய்வு

திரு.சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம் அவர்கள் வாகரையைப் பிறப்பிடமாகவும், மட்/நாவற்குடா கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவர். தமிழ்நாடு, சென்னைப்பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவானான இவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுநிலை தமிழ் ஆசிரியருமாவார்.

தமிழ், ஆங்கிலம், லத்தின் ஆகிய மொழிகளைக் கற்றறிந்த வாகரைவாணன், சமஸ்கிருத மொழியிலும் ஓரளவு பரிச்சயம் உடையவர். இவர் இதுவரை இரண்டு ஆங்கில நூல்கள் உட்பட 35நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கவிதை, சிறுகதை, காவியம், நாடகம், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றைத் தொடர்ந்து எழுதும் இவர், மொழிபெயர்ப்புத்துறையிலும் பெரிதும் ஈடுபாடுடையவர்.

இதுவரை இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு உட்பட பல விருதுகளைப் பெற்ற வாகரைவாணன், பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அவற்றில் சுதந்திரன், உதயசூரியன், அன்னையின் குரல், போது, PRTRICIAN என்பன குறிப்பிடத்தக்கன.

நாடகத்துறையைப் பொறுத்தவரையில் வாகரைவாணன் ஆற்றிய பங்களிப்பும் முக்கியமானது. இதன் பொருட்டு இவர் எழுதிய புரட்சித் துறவி, போர்ப்புயல், போராட்டம், துரோணர் சபதம், பங்குனி பதினைந்து, அக்கினிப் பரீட்சை, கல்லறை திறந்தது முதலான நாடகங்களை எழுதி, இயக்கி அரங்கேற்றியதோடு, மட்டக்களப்புத் தமிழகத்தின் கலை இலக்கிய வளர்ச்சிக்காக 1968ல் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் என்னும் அமைப்பையும் இங்கு நிறுவியமை குறிப்பிடத்தக்கது.

இத்தகையவர் மாவட்ட அடிப்படையிலும் கௌரவிக்கப்படுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர்** : கணபதி இளையதம்பி
**முகவரி** : கண்டலடி வாகரை
**பிறந்த திகதி** : 1934.08.05
**திறமையுள்ள துறை** : அண்ணாவியார்

வாகரை என்னும் அழகிய பிரதேசத்தில் கணபதி தெய்வானை எனும் பெற்றோருக்கு புத்திரனாகப் பிறந்தவர்தான் இளையதம்பியாவார். ஆரம்ப காலத்தில் தனது பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவ பாடசாலையில் தனது கல்வியைக் கற்றார். அங்கு தரம் 6 மட்டும் இருந்த காரணத்தினால் தனது மேற்படிப்பை நகர்ப்புறம் சென்று கற்கவேண்டிய நிலமை இவருக்கு ஏற்பட்டது. ஆனால் அதற்கான வசதியின்மையால் இளையதம்பி அவர்கள் தனது கல்வியை மேற்கொள்முடியவில்லை. எனினும் தனது திறமையினை கூத்து, நாடகம் போன்ற துறைகளில் செலுத்தி பிரபல்யமான அண்ணாவியாராகத் திகழ்கின்றார்.

இவருடைய தந்தையார் அண்ணாவியாராக இருந்தார். இவரைப் பின்பற்றியே இளையதம்பி அவர்கள் கூத்தினை நன்கு கற்றுத்தேர்ந்தார். நாட்டுக்கூத்துக்கள் இவருடைய வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன. தனது தந்தையாரின் உதவியினைக்கொண்டு 1956ம் ஆண்டு கற்பலங்காரி எனும் சரித்திர நாட்டுக்கூத்தை வெகு விமரிசையாக அரங்கேற்றினார். அதே ஆண்டின் பிற்பகுதியில் வாகரையில் சராசந்தன்போர் எனும் நாடகத்தையும் பழக்கி அரங்கேற்றினார். 1957ல் கன்னன் சண்டை, கம்சன்போரினையும், 1959ம் ஆண்டுதுரோணர் யுத்தம் எனும் நாடகத்தையும் பழக்கி அரங்கேற்றினார். 1960ம் ஆண்டில் வாகரையில் அருச்சுணன் தவசும் கண்டலடியில் விலாடபருவம் என்னும் நாடகத்தையும், 2003ல் நச்சுப் பொய்கை எனும் நாடகத்தினையும் 1980வீரசேனன் சண்டை எனும் நாடகத்தினையும், 1988ல் அரசிளங்குமரி நாடகத்தினையும் 1983ல் துரோணர் சபதம் எனும் நாடகத்தினையும், 2010ல் புலேந்திரன்திருமணம் என்னும் நாடகத்தினையும் பழக்கி அரங்கேற்றினார். 2013ல் கண்டலடியில் 13ம் போரினையும் அரங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களுக்காக தமிழ்த்தினப் போட்டிகளுக்காகவும் கூத்துக்களைப் பழக்கி பரிசில்களைப்பெற்றுள்ளார். இதேபோன்று தற்போது இவர் மாவட்ட ரீதியாகவும் கௌரவிக்கப்படவுள்ளதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்கள்

**முழுப்பெயர்** : சாகுல்ஹமீத் அகமட்லெப்பை
**புனைப்பெயர்** : ஏறாவூர் தாஹிர்
**முகவரி** : 06, இல14, புளியடி குறுந்தெரு, ஏறாவூர் 6.
**பிறந்த திகதி** : 1944.11.03
**திறமையுள்ள துறை** : கவிதை, கட்டுரை, பாடலாக்கம், சிறுகதை.

அஹமட்லெப்பை எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் பள்ளிப்பருவம் தொட்டே தமிழ் இலக்கிய ஈடுபாடுகளில், ஆர்வமுடையவராக காணப்பட்டதுடன் "மாணவ மன்றம்" இலக்கியக் கழகங்களில் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் இலக்கியம் சம்பந்தமான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசில்களையும், சான்றிதழ்களையும் தனதாக்கியுள்ளார். மேலும், பாடசாலைக்காலத்தில் பண்டிதர் எஸ்.குமாரசாமி, ஆசிரியர் ஜனாப். ஐ.எல். யூசுப் எனும் கவிஞர் "அவை வேந்து" போன்றோரின் நெறியாள்கையில் இவர் மெருகேற்றப்பட்ட துடன் இலக்கிய புலமை கொண்ட இவரது பெற்றொரின் பங்களிப்பும் இவர் இத்துறையில் பிரகாசிப்பதற்கு பெரிதும் உதவியது.

இவர் கற்பித்தலில் பணியாற்றிய காலத்தில் மாணவ, மாணவியரை கலைசார் துறைகளில் மெருகேற்றி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலான போட்டிகளில் வெற்றிகளைப் பெறுவதற்கும் காரணமாக இருந்துள்ளார். ஏறாவூரில் சுமார் 5 பாடசாலைகளின் பாடசாலை கீதங்களுட்பட, சில கலைசார் கழகங்களுக்கான கீதங்கள், உபவிதிகள் என்பவையும் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

அத்துடன் பல்வேறு அரசியல்சார், சார்பற்ற வரவேற்புப் பாடல்கள், மேடைப்பேச்சுக்கள், இரங்கல்கள், வாழ்த்து மடல்கள் போன்றவை இவருடைய தற்போதைய ஆக்கங்களாகவும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. மேலும் இவர் தனது கலைப்பணிக்காக "சமூக ஜோதி", "கலைத்தென்றல்", "கலாபூஷணம்" ஆகிய சிறப்புப் பட்டங்களையும் பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதுபோன்று இவர் மாவட்ட ரீதியாகவும் கௌரவிக்கப்படவுள்ளதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கௌரவ விருது பெறும் கலைஞர்கள்



**முழுப்பெயர் :** திரு. மூத்தம்பி அருளம்பலம்
**புனைப்பெயர் :** ஆரையூர் அருள்
**முகவரி :** துளசிவாசம், ஆரையம்பதி – 01, ஆரையம்பதி.
**பிறந்த திகதி :** 1949.09.19
**திறமையுள்ள துறை :** நாட்டக்கூத்து, இலக்கியம்.

அதிபராகத் தொழில்புரியும் இவர் தனது ஆரம்பக்கல்வியை மட்/ ஆரைப்பற்றை இ.கி.மி.த.க. பாடசாலையிலும் உயர்கல்வியை மட்/ சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார். இவர் பலகாலமாக கூத்து, நாடகம், இலக்கியம், கிராமியக் கலைகள் என பல துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் பல சஞ்சிகைகள், பத்திரிகைகள், போட்டிகள் என்பவற்றிற்கு கவிதைகளையும், சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். குறிப்பாக "பாரதி மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று" "மண்முனைப் பற்று சிறப்பு", தாயவள் ஏங்கி நிற்கிறாள்" "நாட்டாரியலில் சிறுவருரிமை" கவிதைகளையும் மற்றும் "அவள்", சமுதாய தராசு ஒற்றுமையே உயர்வு தரும். மாணவர் மையக்கல்வி போன்ற சிறுகதைகளையும் இந்து மதத்தின் சிறப்பம்சம் என்ற இந்து சமயம் சார்ந்த பல கட்டுரைகளையும் "சமுதாய முன்னேற்றத்தில் இளைஞரின் பங்கு" உட்பட பல சமூகக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும் "பேச்சியம்பாள் பாடல்கள்" உட்பட பல சமய நூல்களையும் இறுதியாக 2013ம் ஆண்டு "கிராமத்து உள்ளங்கள்" என்ற நாட்டாரியல் நூல்களையும் பதிப்பித்தார். அத்தோடு "வித்தகர் விபுலாநந்தர்", "சித்திர புத்திரர்", கவிஞனும் அரசனும் உட்பட்ட பல வில்லுப்பாட்டுக்களையும் நிகழ்த்தியதோடு, "புதிய விதி சமைப்போம்", குந்தியின் வரம் "சிலைகளும் சிரிக்கவைக்கும்", திருநாவுக்கரசர் போன்ற சமூக, புராண, சிறுவர், வரலாறு மற்றும் நகைச்சுவை என பலதரப்பட்ட நாடகங்களிலும் நடித்துள்ளார். இவற்றோடு "சத்தியவான் சாவித்திரி" (தென்மோடி), "வாலி வதம்" (வடமோடி), வசந்தன் கூத்து போன்ற பல கூத்துக்களில் பாத்திரம் ஏற்று நடித்ததுடன் நெறியாள்கையும் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்து சமயம் சார்ந்த காவடி, ஊஞ்சல், கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்கள் என பல பாடல்களை இறுவெட்டில் வெளியிட்டதோடு கீர்த்தி சிறி, "கலாபூசணம்" என்ற தேசிய விருதுகளையும், "கூத்துக்கலைஞன்", "சமாதான நீதவான்", "இறைஞான தேசிகர்", "சாதனையாளர்", இறைக்கவிமாமனி என பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். அதேபோன்று மாவட்ட ரீதியாகவும் கௌரவிக்கப்படவுள்ளதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**முழுப்பெயர்** : திரு. பூபாலப்பிள்ளை மயன் செல்லத்துரை
**முகவரி** : மட்பாண்டவீதி, பெரியபோரதீவு, மட்டக்களப்பு
**பிறந்த திகதி** : 05.06.1936
**திறமையுள்ள துறை** : ஆய்வுத்துறை, நாடகத்துறை

மட்டக்களப்பு பெரியபோரதீவை பிறப்பிடமாகக் கொண்ட இவர் திரு.திருமதி இராசம்மா கோபாலப்பிள்ளை அவர்களுக்கு மகனாக பிறந்தார். பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திலும், மட்டக்களப்பு அரசடிப் பாடசாலையிலும் கல்வி பயின்ற இவர் க.பொ.த சாதாரணம் வரை கல்வி கற்றார்.

சமூகசேவை, கிராம அபிவிருத்திச்சங்கம், கூட்டுறவுச்சங்கம், போக்குவரத்து சபை, ஆலயதிருப்பணிச்சபை, கலாசாரசபை, எழுத்தாளர் சங்கம், முதியோர் சங்கம், இலங்கை பொற்தொழிலாளர் சமாசம், தமிழ்ச்சங்கம், காந்திசேவா சங்கம், பாடசாலை அபிவிருத்திசபை, போரதீவுபற்று அபிவிருத்தி சபை போன்ற பொது அமைப்புக்களில் தலைவர், செயலாளர், உபதலைவர், உறுப்பினர் போன்றவற்றிலும் சேவையாற்றி வருகிறார்.

பாடசாலைக் காலத்திலே "தாயகம்" எனும் கையெழுத்துப் பிரதியின் ஆசிரியராக இருந்த போது இவரது எழுத்துறை ஆரம்பமானது. இவர் பத்திரிகைகள் பலவற்றில் கட்டுரைகளை எழுதியுள்ளார். (தினகரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, ஈழநாடு, இலண்டன் பத்திரிகைகளிலும் இவரது ஆக்கம் வெளிவந்துள்ளது.) இவர் நடத்திய பத்திரிகைகளாக தாயகம், நேர்வழி, சமநீதி, தேனாடு போன்றவற்றையும், அத்தோடு தமிழனே கேள்?, இலங்கைத்தமிழ் வரலாறும் இன்றைய நிலையும், போன்ற வெளியீட்டு நூல்களும், இராவணன், இலங்கையின் பூர்வீக வரலாறு, மகாவம்சத்தின் உண்மைத்தன்மை போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

1988ல் பெரியபோரதீவு முத்தமிழ் இந்து இளைஞர் சங்கம் "சமூகஜோதி" என்ற பட்டமளித்து கௌரவித்தது. 1995ம் ஆண்டு பெரியபோரதீவு விஸ்வபிரம்ம குல ஆதினம், சென்னை விஸ்வகர்ம சங்கத்தினராலும் 1996ம் ஆண்டு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பரிபாலன சபையினராலும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு "பொற்கிளி" வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2000ம் ஆண்டு இலங்கையில் "விஸ்வகர்மா" என்ற நூல் வெளியீட்டுக்கு தலைமைதாங்கிய வீரகேசரி பிரதம ஆசிரியர் சிவநேசச்செல்வன் "ஆசுசாலி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். 2008ம் ஆண்டு மன்னார் தமிழ் சங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது. 2004ம் இலங்கை கலாசார அமைச்சு கலாபூசணம் எனும் பட்டத்தினை வழங்கிக்கௌரவித்தது.

மேலும் இவர் வெற்றி விழா?, கள்வன்யார்?, கட்டை விரல், தமிழுக்கு தலை கொடுத்த மன்னன்?, விதவை என்பவற்றை எழுதி நடித்தள்ளார்.

1952ம் ஆண்டு தேர்தலோடு ஆரம்பமான அரசியல் வாழ்வு இன்று வரை தொடர்கிறது. 1958ம் ஆண்டு பட்டிருப்புத் தொகுதியில் முதல் முதலாகத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். மத்திய சபை உறுப்பினராக 1995ம் முதல் 1977ம் ஆண்டு வரை சேவையாற்றினார். கட்சி நடத்திய சகல அறப்போராட்டங்களிலும் பங்காளியாகி சேவை செய்தார். இவற்றின் பெறுபேறாக "தந்தை செல்வா" விருதையும், "இராசமாணிக்கம் நூற்றாண்டு விழா" ஞாபக விருதுகளையும் பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட இலக்கிய விழா - 2013

## நிதி அனுசரணை வழங்கியோர்

| | |
|---|---|
| கலாசார திணைக்களம் | – கொழும்பு |
| இலங்கை வங்கி | – மட்டக்களப்பு |
| மக்கள் வங்கி | – மட்டக்களப்பு |
| தேசிய சேமிப்பு வங்கி | – மட்டக்களப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

மாவட்ட இலக்கிய விழா 2013ஐ முன்னிட்டு வெளிவரும் எழுகதிர் சிறப்பு மலர் சிறப்புற அமைவதற்கு எமக்கு ஊக்கமளித்து ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கி அணிந்துரையும் அளித்த மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி PSM சார்ள்ஸ் அம்மணி அவர்களுக்கும் மாவட்ட உதவிச்செயலாளர் திரு.S.ரங்கநாதன் அவர்களுக்கும் மாவட்ட முன்னாள் உதவிச்செயலாளர் திரு.V.வாசுதேவன் அவர்களுக்கும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் பட்டதாரிப்பயிலுநர்கள், வாழ்த்துரைகள் வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.விஜித் கனுகல மற்றும் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திரு.V.வாசுதேவன் வெளியீட்டுரை வழங்கிய திரு.S.ரங்கநாதன் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இச்சிறப்பு மலருக்கான நிதி உதவி வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்களம், மட்டக்களப்பு இலங்கை வங்கி, மாவட்ட இலக்கிய விழாவிற்கு நிதி உதவி வழங்கிய மக்கள் வங்கி (மட்டக்களப்பு) தேசிய சேமிப்பு வங்கி (மட்டக்களப்பு) சரீரம் நிறுவகம், லங்கா தேசிய வங்கி (தாழங்குடா) சேவா லங்கா மன்றம் ஆகிய நிறுவகங்களுக்கும் எமது இனிய நன்றிகள்,

இன்னும், மாவட்ட இலக்கிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விழா சிறப்புற கலை நிகழ்ச்சிகளை வழங்கிய கல்வி கலை நிறுவகங்கள்,

எழுகதிர் சிறப்பு மலரை சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தினர்,

விழா சிறப்பாக நடைபெற சகலவழிகளிலும் ஒத்தழைப்பு நல்கிய மாவட்ட, பிரதேச செயலக கலாசாரபிரிவு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜனாப். எம். ஏ. ஸி ஜெய்னுலாப்தீன்
கலாசார அபிவிருத்தி உதவியாளர்
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பு இல்லத்தினரின்
# முழு குடும்பத்திற்கும் சேமிப்பு கணக்கு




* ரண் கெகுளு கணக்கிற்கு உயர் வட்டி, ரூ 100,000 வரையிலான வைத்திய காப்பீடு, மற்றும் பிறந்தநாள் பரிசு உடன் 2000 புலமை பரிசில்களுடன் தாய்,தந்தை அல்லது பாதுகாப்பாளருக்கு ரூ 500,000 பெறுமதியான ஆயுட் காப்புறுதி
* 14+ கணக்கு வைத்திருப்போருக்கு டெபிட் அட்டை மற்றும் உயர் வட்டி
* 18+ கணக்கு வைத்திருப்போருக்கு திருமணத்தின் போது தங்க நாணயம் பரிசில் மற்றும், ரூ 500,000 பெறுமதியான ஆயுட் காப்புறுதியும் ரூ 100,000 வரையிலான வைத்திய காப்பீடு
* மகளிர் பொற் கணக்கிற்கு ரூ 500,000 வரையிலான ஆயுட் காப்புறுதி
* சிரேஷ்ட பிரஜைகளின் கணக்கிற்காக 1% மேலதிக வட்டி

சகல சேமிப்பு கணக்கிற்கும் இலங்கையின் முதற் தர அரச வங்கியின் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை

நீங்களும் இன்றே அருகில் இருக்கும் இலங்கை வங்கி கிளைக்கு விரையுங்கள்

601 கிளைகள் | 451 ATMகள் | 24 x 365 | 24 x 7 அழைப்பு நிலையம் | SMS | SME நிலையங்கள் 10

www.boc.lk | இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org